# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 2 செவ்வாய்க்கிழமை (19-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:264


# சம்மாந்துறையில் இருவர் சுட்டுக்கொலை!

# பதற்றத்தை அடுத்து பாதுகாப்புத் தீவிரம்!!

## அலுவலகங்கள், பாடசாலைகள் பூட்டு; போக்குவரத்து ஸ்தம்பிதம்

அக்கரைப்பற்று,ஓகஸ்ட்19

**சம்மாந்துறை, சேனவட்டை வீதியில் நேற்று முன்தினமிரவு 8.30 மணியளவில் இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமது வயல்களுக்குச் சென்ற அவர்கள் மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே வழியில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து சம்மாந்துறைப் பிரதேசத்தில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளன. இதனையடுத்து அங்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.**

இக்கொலைகளை அமைச்சர் ரவூப் ஹக்கீம், எம்.பிக்களான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், கே.எம்.தௌபீக், எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் வன்மையாகக் கண்டித்துள்ளனர். இச்சம்பவத்தை அவர்கள் உடனடியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். சம்பவம் குறித்து சம்மாந்துறைப் பொலீஸார் பூரண விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

சம்மாந்துறையைச் சேர்ந்த ஆதம்பாவா இப்றா லெப்பை (வயது-40 மூன்று பிள்ளைகளின் தந்தை), கலந்தர் லெப்பை இஸ்மாயில் (வயது-29 ஒரு பிள்ளையின் தந்தை) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

கொல்லப்பட்ட இருவரும் இரவு 7 மணியளவில் வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். வயல் அறுவடைக்காக கூலித் தொழிலாளர்களுடன் பேசுவதற்கு அவர்கள் சென்றனர் எனவும் -

பின்னர் வயல் பிரதேசத்தில் உள்ள தேநீர்க் கடையொன்றில் தேநீர் அருந்திவிட்டு வரும்போதே சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும் -

தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைச் சம்பவம் காரணமாக சம்மாந்துறையில் உள்ள அரச அலுவலகங்கள், வங்கிகள், பாட

(14ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் மற்றும் அமைச்சர்களுடன் ஹக்கீம் நள்ளிரவு வரை பேச்சு

கொழும்பு,ஓக.19

இரட்டைப் படுகொலைச் சம்பவத்தை அடுத்து சம்மாந்துறைப் பகுதிக்கு நேற்றுக்காலை விரைந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று மாலை கொழும்பு திரும்பினார். திரும்பிய கையோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து கிழக்குப் பாதுகாப்பு நிலைமை குறித்து அவருடன் விரிவாக உரையாடினார். இந்தச் சந்திப்பு நள்ளிரவு வரை நீடித்தது.

கொழும்பில் விசும்பாய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பிரதமருடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, விஞ்ஞான, பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கு கொண்டனர்.

கிழக்கில் முஸ்லிம்களின் பாது

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரான்ஸின் பரீஸ் நகருக்கு

## கருணா, புலித்தேவன், மகேஸ்வரன் தமிழ்ச்செல்வனுடன் இன்று பயணம்

கிளிநொச்சி,ஓக.19

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான அரசின் வரைவு குறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆராய பிரான்ஸ் செல்லும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் இன்று கிளிநொச்சியிலிருந்து புறப்படுகிறார். மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா, புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் தமிழ்ச்செல்வனுடன் செல்கிறார்கள்.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான இக்குழுவினர் கிளிநொச்சியிலிருந்து ஹெலிமூலம் இன்று கொழும்பு புறப்படுகிறார்கள். பின்னர் கட்டுநாயக்கவிலிருந்து அவர்கள் பிரான்ஸ் செல்வார்கள்.

பிரான்ஸில் சுமார் 10 நாள்கள் தங்கியிருக்கும் இக்குழுவினர் சட்ட வல்லுநர்களுடன் ஆராய்ந்து உத்தேச இடைக்கால நிர்வாக இறுதி வரைபை தயாரிப்பர். இவர்களுக்கான பயண ஏற்பாடுகளை பிரெஞ்சுத் தூதரகம் மேற்கொண்டுள்ளது. (ஒ-3)

## சம்மாந்துறைப் படுகொலைகளுடன் புலிகளுக்கு துளியும் சம்பந்தமில்லை

### அம்பாறை துணை அரசியல் பொறுப்பாளர் மறுப்பு

அம்பாறை மாவட்டத்தில் வளர்ந்து வரும் தமிழர் - முஸ்லிம் உறவைச் சகித்துக்கொள்ளமுடியாத தீயசக்திகளின் செயலே சம்மாந்துறையில் இரு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவமாகும்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

சம்மாந்துறை படுகொலைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் துளியும் சம்பந்தமில்லையென்று அவர் முற்றாக மறுப்புத் தெரிவித்தார்.

குயிலின்பன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளாகிய நாம் தமிழ் - முஸ்லிம் உறவுகளை மேலும் உறுதிப்படுத்தவும், வலுப்படுத்தவுமே நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றோம். அப்பாவி மக்களை, குறிப்பாக முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்யும் எந்த அவசியமும் எமக்கில்லை.

தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடனும், விழிப்புடனும் செயற்படுவதன் மூலம்தான் எதிர்காலத்தில் இத்தகைய தீயசக்திகளை இனங்காணமுடியும்.

மக்கள் அமைதிகாத்து இத்தீய சக்திகளின் இத்தகைய மிலேச்சத்தனமாக செயற்பாடுகளை முறியடிக்கவேண்டும் - என்றார்.

## மின்னல் தாக்கிய காரணத்தால் தொலைபேசிச் சேவை பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

குடாநாட்டில் நேற்று அதிகாலை முதல் வெளியிடங்களுக்கான தொலைபேசி சேவை பாதிப்புக்குள்ளானது.

இடி மின்னல் தாக்கியதால் 30 சதவீதமான இணைப்புக்களின் உபகரணங்கள் சேதமடைந்தன என்றும்-

இதனால், வெளியிடங்களுக்கான அழைப்புக்களைப் பெறுவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டது என்றும் - ரெலிகொம் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இணைப்புக்களை திருத்தியமைக்கும் பணிகள் நேற்று முழுநாளும் மேற்கொள்ளப்பட்டன என்றும் -

பெரும்பாலும் இன்று சேவைகள் வழமைக்குத் திரும்பும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

இதேவேளை, வெளிநாடுகளிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் நல்லூர் உற்சவத்தையொட்டி வந்துள்ள பலரும் பிற இடங்களுக்கு தொடர்புகொள்ள ஒரே சமயம் முயற்சிப்பதால் தொலைபேசி அழைப்பைப் பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஒ-3)

## வவுனியாவில் 'பொங்குதமிழ்' செயலகம் திறப்பு

'பொங்குதமிழ்' ஏற்பாட்டு செயலகம் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா இந்து இளைஞர் பேரவைக் கட்டடத்தில் இந்தச் செயலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வவுனியா பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுச் செயலாளர் அமிர்தலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (ஒ-9)

## வயோதிபர் சடலம் நகரில் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ். பிரதான வீதியில் தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் நேற்றுக் காலை வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

திருமறைக் கலாமன்றத்தின் காவலாளியான 5ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த மனுவல் டொனஸ் (வயது-61) என்பவரின் சடலம் என அது அடையாளம் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் இருந்து புறப்பட்ட இவர் நேற்றுக் காலை வரையும் வீடுதிரும்பாததை அடுத்து தேடுதல் மேற்கொண்ட சமயம், தண்ணீர்த் தாங்கிக்கு அருகில் உள்ள பாலம் ஒன்றின் கீழ் இருந்து சடலம் மீட்கப்பட்டது.

யாழ். மேலதிக நீதிவான் பா.சுப்பிரமணியம் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்ட பின் சடலத்தை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார். (ஒ-3-ரி-30)

### குடாநாட்டுப் பொது நிகழ்வுகளில்

## தமிழீழத் தேசியக் கொடி ஏற்றுவது குறித்து கண்காணிப்புக்குழு ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஓக.19

குடாநாட்டில் நடைபெறும் நிகழ்வுகளில் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்படுவது தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றப்படுவது யுதத்நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனப் படைத்தரப்பு கண்காணிப்புக் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது.

குடாநாடு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றுவதை நிறுத்தும்படி கண்காணிப்புக்குழு அந்த அந்த மாவட்டக்களின் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையினரைக் கோரிவருகின்றனர்.

இந்த வகையில் குடாநாட்டில் நடக்கும் பொது நிகழ்வுகளில் தேசியக் கொடி ஏற்றும் விடயம் தொடர்பாக கண்காணிப்புக்குழு கவனம் செலுதத முன்வந்துள்ளது.

கடந்த சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த சர்வதேச கூட்டுறவுதின விழாவில் தமிழீழ தேசியக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கசிப்பு வழக்கில் இருவருக்கு தலா 4 வருடக் கடூழியச்சிறை

### ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

ஊரெழு மேற்கில் கசிப்புக்குகை ஒன்று நேற்றுமுன்தினம் இரவு கண்டு பிடிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட இரு நபர்களுக்கு தலா நான்கு வருட கடுழியச் சிறைத் தண்டனையும், ஒரு லட்சம் ரூபா அபராதமும் யாழ் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டது.

கசிப்பு வைத்திருந்தமை, கசிப்பு உற்பத்தி செய்தமை, கசிப்பு உற்பத்திக்கான கோடா மற்றும் உபகரணங்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் ஊரெழு மேற்கைச் சேர்ந்த தம்பு ஜெயசீலன், கந்தையா யோகநாதன் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்நிலையில் நடைபெற்றது.

விசாரணையின் முடிவில் சந்தேக நபர்கள் இருவரும் குற்றவாளிகளாகக் காண[illegible]லா 4 வருட கடு

(1[illegible]க்கம் பார்க்க)

### நெடுந்தீவுக் கடற்பரப்பில்

## பிடிபட்ட 60 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறையில் விசாரணை

நெடுந்தீவு,ஓக.19

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் கடந்த சனிக்கிழமை ஊடுருவி மீன் படித்துக்கொண்டிருந்த சமயம் நெடுந்தீவு மீனவர்களால் பிடிக்கப்பட்ட 60 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

நெடுந்தீவில் இருந்து இந்திய மீனவர்களுடன் அவர்களது ட்றோலர் படகுகளும் ஊர்காவற்றுறைக்கு எடுத்துச்செல்லப்பட்டன.

இந்த மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும், நேற்று மாலைவரை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. இதேசமயம் குறிப்பிட்ட 60 இந்திய மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் இந்தியக் கடல் எல்லையில் வைத்து விடுவிக்கப்பட்டதாக தமிழகத்தில் இருந்து ஒளிபரப்பாகும் செயற்கைக் கோள் தொலைக்காட்சி தனது செய்தியில் நேற்று மதியம் தெரிவித்திருந்தது. (ஒ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அமைச்சர் ராஜித சேனாரத்னவை கொல்லத் திட்டம் தீட்டப்பட்டதா?

## பாதாள உலகக் குழு உறுப்பினரிடம் விசாரணை

காணியமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கொலை செய்யத் திட்டம் தட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது குறித்து குற்றப் புலனாய்வுப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

தற்பொழுது விளக்கமறியலில் இருக்கும் பாதாள உலகக் குழு உறுப்பினர் ஒருவரை விசாரணை செய்தபோதே இக்கொலைச் சதித் திட்டம் தெரியவந்தது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். காணி சம்பந்தப்பட்ட ஒரு சம்பவமே அமைச்சரைக் கொலை செய்யத் திட்டமிடப்பட்டதற்கான காரணம் எனவும் தெரியவந்திருக்கிறது.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலேயே இத்திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பாதாள உலகக் குழு உறுப்பினருடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவரே கொலைக் கொந்தராத்தை வழங்கியிருக்கிறார் எனவும் பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பிட்ட பாதாள உலகக் குழு உறுப்பினர் விரைவில் பிணைபெற்றுச் செல்லவிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

இக்கொலைச் சதித்திட்டம் குறித்து பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். அமைச்சர் சேனாரத்னவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# கல்வி சாரா ஊழியர்கள் வேலைநிறுத்தம் நீடிப்பு

கற்பிட்டி,ஓக.19

அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்வி சாரா ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தம் இன்று எட்டாவது நாளாகவும் தொடர்கிறது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இப்போராட்டத்தை தீவிரப்படுத்தவுள்ளதாக எச்சரித்துள்ள ஊழியர் சங்கம, ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டம் ஆகியவை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை, யாழ்பல்கலைக்கழகக் கல்வி சாரா ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்று மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார். (ஓ-ரி)

### எழுதுமட்டுவாள் வடக்குப் பகுதியில்

# துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இராணுவச் சிப்பாயின் சடலம் மீட்பு

தென்மராட்சி,ஓக.19

எழுதுமட்டுவாள் வடக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இராணுவச் சிப்பாய் ஒருவரின் சடலம் கொடிகாமம் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை இச்சடலம் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹெட்டி ஆராச்சிகே சுனில் குமார என்ற சிப்பாயின் சடலமே சூட்டுக் காயத்துடன் மீட்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிவானுக்குப் பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினிடம் ஒப்படைக்குமாறு - பொலீஸாரை நீதிவான் பணித்தார்.(ஒ-117)

# அஞ்சல் அடையாள அட்டைகளுக்கு காலதாமதமின்றி விண்ணப்பிக்குக!

## பிராந்திய அதிகாரி அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.19

அஞ்சல் அடையாள அட்டையைப் பெற்றவேண்டிய மாணவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தாமதமின்றி அனுப்பிவைக்குமாறு தபால் திணைக்கள யாழ். பிராந்திய நிர்வாக அதிகாரி ச.சிவராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்கள் தமது அஞ்சல் அறிமுக அட்டைகளைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தினைத் தமது பாடசாலை அதிபரினூடாக அனுப்பிவைக்க வேண்டும்.

மாணவர்கள் பலரும் இறுதி நேரத்தில் விண்ணப்பங்களை அனுப்புவதால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டே காலதாமதமின்றி அஞ்சல் அடையாள அட்டைக்குரிய விண்ணப்பங்களை அனுப்பிவைத்தால் சிரமமின்றி அஞ்சல் அறிமுக அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார் அவர். (ஒ-12)

# நாய்கள் கடித்துக் குதறிய பச்சிளம் சிசுவின் சடலம் மீட்பு!

## திருமணமாகாத பெண் கைது

பதுளை,ஓக19

நாய்களினால் கடித்துக்குதறப்பட்ட நிலையில் பச்சிளம் ஆண் சிசுவின் சடலமொன்றை மடுல்சீமைப் பொலீஸார் நேற்றுக்காலை மீட்டெடுத்தனர்.

மடுல்சீமைப் பகுதியைச் சேர்ந்த வராவிபத்தனை தோட்ட டுமோ பிரிவு தேயிலைக் கொழுந்து நிறுக்கும் மண்டபத்திற்கு முன்னாலேயே இச்சடலம் கிடந்தது. நேற்றுமுன்தினமே இச்சிசு பிரசவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக பசறை, கிக்கிரிவத்தை தோட்டத்தைச் சேர்ந்த திருமணமாகாத முத்துச்சாமி பாப்பாத்தி என்னும் இளம்பெண்ணை மடுல்சீமைப் பொலீஸார் கைது செய்துள்ளனர். சிசுவின் சடலத்தின் ஒரு பகுதியையே பொலீஸாரால் மீட்க முடிந்தது.

பசறை நீதிவான் பிரதீப் அபேரட்ண சம்பவ இடத்தில் விசாரணையை மேற்கொண்டு கைதுசெய்யப்பட்ட இளம் பெண்ணை எதிர்வரும்21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். குழந்தையின் மரணம் கொலையெனத்தீர்ப்பு வழங்கினார்.

மடுல்சீமைப் பொலீஸார் தீவிர புலனாய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புன்னாலைக்கட்டுவன் பகுதியில் விறகு வெட்டிகளால் மரங்கள் அழிப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.19

புன்னாலைக்கட்டுவன் வடக்கு மற்றும் குப்பிழான், ஏழாலை ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமராத இடங்களில் நுழைபவர்களால் பாரிய மரங்கள் விறகுக்காகத் தறித்து எடுத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் பச்சை மரங்களைக்கூட விட்டுவைப்பதில்லை எனக் கூறப்படுகிறது.

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என குழுக்களாக மேற்படி பகுதிகளினுள் பிரவேசிப்பவர்கள் மரங்களை வெட்டி சிறிய உழவு இயந்திரங்களின் உதவியுடன் எடுத்துச்செல்வதாகவும் -

மேற்படி பிரதேச மக்கள் வெவ்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வசித்துவருவதை இந்த விறகுவெட்டிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-69)

## செயலமர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.19

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நாளைமறுதினம் நடைபெறவிருந்த றோமன் கத்தோலிக்க பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும்

செயலமர்வு இடம்பெறும் திகதி பின்னர் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பி.வேணுகோபால் அறிவித்துள்ளார். (ஒ-5)

## யோகிராஜ் நினைவுதினம்

யாழ்ப்பாணம்,ஓக.19

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்த மகாராஜ் சமாதி அடைந்த முதலாம் வருட நிறைவு நிகழ்வும்'இமய ஜோதி' நூல் வெளியீட்டு நிகழ்வும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

திவ்ய ஜீவன சங்கத்தலைவர் திருமதி க.சூரசங்காரன் தலைமையில நடைபெறும் இந்நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய ஆசிரியர் செல்வி புஸ்பா செல்வநாயகம் கலந்து கொள்வார். ஆசியுரைகளை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், செல்வி சாயிமாதா ஆகியோரும், சிறப்புரையை டாக்டர் க.சிவனேசனும் நிகழ்த்துவர். (ஒ-5)

## கண் பரிசோதனை முகாம்கள்

யாழ்ப்பாணம்,ஓக.19

மானிப்பாய் றோட்டறக்ட் கழக ஆதரவில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை திருநெல்வேலி கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கொழும்பிலிருந்து வருகை தரும் வைத்திய நிபுணர்களால் நடத்தப்படவுள்ள இக்கண்பரிசோதனை முகாம், நாளை மாகியம்பதி திருவள்ளுவர் சனசமூக நிலைய மண்டபத்திலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை அச்சுவேலி புனித திரேசம்மாள் மகளிர் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது. (ஒ-9)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.19

கலாநிதி வி.நித்தியானந்தம் எழுதிய 'இலங்கையின் பொருளாதார வரலாறு - வடக்கு, கிழக்கு பரிமாணம்' என்ற நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்பல்கலைக்கழக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத் தலைவர் எஸ்ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் கலந்துகொள்வார்.

இந்நூலின் அறிமுகவுரையை லண்டன் தமிழ் சர்வதேச ஒலிபரப்புச் சேவைப் பணிப்பாளர் த.ரஞ்சித்தும், நூலின் ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் ஆங்கிலப் போதனாசிரியர் ஏ.ஜே.கனகரத்தினம், நோர்வே விவசாயப் பல்கலைக்கழக பேராசிரியர் ந.சண்முகரத்தினம் ஆகியோரும் நிகழ்த்துவர். (ஒ-5)

# ஆஸி.பிரதித் தூதுவர் புதனன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ்குடாநாட்டுக்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கான ஆஸ்திரேலிய பிரதித தூதுவர் கேற் லோகன் அம்மையார் நாளை புதன்கிழமை யாழ். வருகின்றார்.

நாளை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வரும் இவர், காலை 10 மணிக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம்போல் தலைமையில் நடைபெறும் கூட்டத்திலும் பங்கேற்பார்.

யாழ்.குடாநாட்டில் மீள்குடியமர்வு மற்றும் புனர்நிர்மாண வேலைகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதையும், உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை பொதுமக்களின் மீள்குடியமர்வில் தடங்கலை ஏற்படுத்தியுள்ளதா என்பதையும் அவர் ஆராய்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-8)

# கைதான வெளிநாட்டவர்களை நாடுகடத்த நீதிவான் கட்டளை

இலங்கை ஊடாக இத்தாலிக்குச் செல்ல முற்பட்ட இந்திய, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 114 இளைஞர்களை நாடு கடத்துமாறு கண்டி நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி இந்த இளைஞர்கள் கண்டியில் இரு இடங்களில் மறைந்திருக்கையில் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். 15ஆம் திகதி கண்டி நீதிவான் முன்னிலையில் அவர்கள் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் மீண்டும் கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை குறிப்பிட்ட நாடுகளின் தூதரங்கள் மூலம் நாடு கடத்துமாறு நீதிவான் லியோன் செனவிரத்ன உத்தரவிட்டார். (ஒ)

# சிறையில் இளைஞர் தாக்கப்பட்டதில் தொடர்பில்லை என்கிறார் மதகுரு

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ். சிறைச்சாலையில் இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் தனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று யாழ். சென். ஆன்ஸ் தேவாலய பங்குத்தந்தை வண. பி.எம்.இம்மானுவேல் தெரிவித்துள்ளார்.

யாழ். கோவில் வீதியைச் சேர்ந்த டி.ஏ.அன்ரனி ஜெயக்குமார் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

வண.பி.எம்.இம்மானுவல் தொடாபாகவும் அந்த முறைப்பாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அது விடயமாக இம்மானுவேல் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் தன் மீதான மேற்படி குற்றச்சாட்டை அவர் மறுத்துள்ளார்

அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

18.08.2003 உதயன் 2ஆம் பக்கத்தில் வெளியான செய்தியில் எனது பெயரும் தொடர்புபடுத்தப்பட்டிருப்பதால் எனது நிலைப்பாட்டினை விளக்கி இம் மறுப்புச் செய்தியினை பிரசுரிக்கும்படி வேண்டுகிறேன்.

✪ சம்பந்தப்பட்ட இளைஞர் யாழ்ப்பாண நீதிமன்றத்தினால் இரண்டு தடவைகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதற்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதற்குக் காரணமும் நானில்லை.

✪ சம்மந்தப்பட்ட இளைஞர் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டமைக்கும் யாழ்ப்பாணத்தை விட்டு உடன் வெளியேறுமாறு இனந்தெரியாதவர்களினால் மிரட்டப்படுவதற்கும் எனக்கும் ஒரு தொடர்பும் இல்லை. அதற்குக் காரணமும் நானில்லை.

✪ இது சம்பந்தப்பட்ட இளைஞரால் வேண்டுமென்றே என்மீது அபாண்டமாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டாகும் - என்றுள்ளது.

# காத்தான்குடி ஆற்றில் இறங்கிய இரு சிறுவர்கள் மூழ்கி மரணம்!

ஆற்றங்கரையோரம் விளையாடிக்கொண்டிருந்த இரு மாணவர்கள் நீரில் மூழ்கி மரணமான பரிதாப சம்பவம் ஒன்று நேற்றுக்காலை காத்தான்குடியில் நடைபெற்றுள்ளது.

காத்தான்குடி ஆற்றங்கரையில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று சிறுவர்களில் இருவர் ஆறறில் மிதந்து வந்த ஒரு பொருளை எடுக்க ஆற்றில் இறங்கியபோது நீரில் அடித்துச்செல்லப்பட்டு மரணமானார்கள்

காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலயத்தில் 8 ஆம் ஆண்டில் கல்வி பயிலும் எம்.ஐ.எம்.றினாஸ் (வயது 13), ஹிழுறியா வித்தியாலயத்தில் 3ஆம் ஆண்டில் பயிலும் உஸனார் கிப்கி (வயது 8)ஆகியோரே இறந்த இருவருமாவர். (ஒ)

# நயினை - நல்லூர் வீதி பஜனை இம்முறையும் வழமைபோல்

நல்லூர்க் கந்தன் இரதோற்சவத்தை முன்னிட்டு நயினாதீவில் இருந்து நல்லூருக்கு ஆண்டுதோறும் பஜனைப் பாதயாத்திரை இம்முறையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை நயினாதீவு ஸ்ரீநாக பூசணி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை மற்றும் வழிபாடுகள் இடம் பெறும். பின்னர் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை வேல்பூசை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமாகும்.

தொடர்ந்து பாதயாத்திரைக் குழுவினர் குறிக்கட்டுவான் மனோன்மணி அம்பாள் ஆலயம், புங்குடுதீவு அரியநாயகன்புலம் விநாயகர் ஆலயம், இறுப்பிட்டி விநாயகர் ஆலயம், காளிகா பரமேஸ்வரி ஆலயம், ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், ஆதிவைரவர் ஆலயம், தென்பெருந்துறை சிவன் ஆலயம், கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தை மாலை 6மணியளவில் வந்தடைவர்.

மீண்டும் மறுநாள் திங்கட்கிழமை அதிகாலை அங்கிருந்து புறப்படும் பஜனைப் பாதயாத்திரைக்குழுவினர் இராஞ்சி கந்தன் ஆலயம், விநாயகர் ஆலயங்கள், மடத்துவெளி முருகன் விநாயகர் ஆலயம், வேலணைத் துறை முருகன் ஐயனார் ஆலயம், வேலணை வங்களாவடி முருகன் ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று விசேட பஜனைகளில் ஈடுபடுவர்.

தொடர்ந்து அங்கிருந்து புறப்படும் பஜனை பாதயாத்திரைக் குழுவினர் சாட்டி வழியாக கெட்டிப்புலம் ஐயனார் ஆலயம், மண்கும்பான் விநாயகர் ஆலயம் ஆகியவற்றை அடைந்து அங்கிருந்து மண்டைதீவு, பண்ணை வழியாக கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தை அடைந்து பின்னர் யாழ். பஸ் நிலைய வைரவர் ஆலயம், சத்திரம் ஞானவைரவர் ஆலயம், நாவாந்துறை நாகபூசணி அம்பாள் ஆலயம், வைரவர் ஆலயம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தை வந்தடைவர்

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை புறப்படும் பாதயாத்திரைக் குழுவினர் சீனிவர்சகம் வீதிவழியாக வண்ணார்பண்ணை சிவன், காளி அம்பாள் ஆலயம், பெருமாள் கோவில், கந்தர்மடம், சிவஉதய நாகபூசனி அம்பாள் ஆகிய ஆலயங்களை வந்தடைந்து பின்னர் நல்லை ஆதீனத்துக்கு வந்து சேர்வர்.

பின்னர் இறுதியாக நல்லூர் ஆலய திருவீதியில் விசேட பஜனை இடம்பெறும்.

சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜம் இந்த பஜனை பாதயாத்திரையை வருடம் தோறும் ஒழுங்கு செய்து நடத்திவருவது தெரிந்ததே. (எ-10-173)

# வாஜ்பாய் கூட்டணி அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

## வாக்கெடுப்பு இன்று; அ.தி.மு.க. கலந்துகொள்ளாது

• இந்திய நாடாளுமன்றில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நேற்று இடம்பெற்றது.

விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்று, மாலை வாக்கெடுப்புக்கு விடப்படும்.

நேற்றைய விவாதத்தில் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி, வாஜ்பாய் அரசின் மீது சரமாரியான குற்றச்சாட்டுக்களை சுமர்த்தினார்.

இன்று இடம்பெறும் விவாதத்தில் பிரதமர் வாஜ்பாய் குறுக்கிட்டுப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை -

அதிமுக தலைமையிலான தமிழக அரசு வாக்கெடுப்பில் கலந்துகொள்ள மாட்டாது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

மேலும், இத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கப் போவதாக ம.தி.மு.க அறிவித்துள்ளது. இதனைக் கட்சியின் அவைத் தலைவர் எல்.கணேசன் தெரிவித்தார். வேலூர் சிறைக்குச் சென்று வை.கோவைச் சந்தித்த பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பில் கலந்துகொள்வதற்காக டெல்லி செல்லவிருந்த வைகோ டெல்லிக்குச் செல்லமாட்டார் என்றும் மற்றைய மூன்று ம.தி.மு.க உறுப்பினர்களும் தீமானத்தை எதிர்த்து வாக்களிப்பர் என்றும் - கணேசன் தெரிவித்தார்.

# நேபாளத்தில் அரசு-மாவோயிஸ்ட் இடையேயான பேச்சுக்கள் மீண்டும்!

ஏழு ஆண்டுகளாக நேபாளத்தில் இடம்பெற்று வரும் கலகங்களை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் அந்நாட்டில் அரசு-மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கிடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் ஆரம்பித்த பேச்சுக்கள் கடந்த மே மாதம் திடீரென நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் அரசு மீண்டும் தீவிரவாதத்தலைவர்களுக்கு பேச்சுக்கு வருமாறு அழைப்பு விடுத்தது. இதனைத் தொடர்ந்து பேச்சுக்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

நேபாளத்தில் நடைமுறையில் இருது வரும் மன்னர் ஆட்சியை எதிர்த்து தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகின்றனர்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் தலைவர் பாபுராம் பட்டாராய் இது பற்றிச் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

பேச்சில் இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் என்ற எமது கோரிக்கையை முன்வைப்போம் என்றார்.

அரசுத்தரப்புசார்பாக பேச்சுக்களுக்குத் தலைமை வகிக்கும் கமால் தபா கூறுகையில், நாட்டில் அமைதி ஏற்பட இந்தப் பேச்சுக்களை வெற்றிகரமாக முடிக்கவேண்டும் என்பதில் அரசு தீவிரமாக உள்ளது. இதனால் எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க முடியுமோ அவ்வளவு தூரம் விட்டுக் கொடுப்போம். என்றார்.

# றொய்ட்டர் படப்பிடிப்பாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை!

பக்தாத்,ஓக.19

ஈராக்கில் றொய்ட்டர் படப்பிடிப்பாளரான மாசேன் தனா (வயது-43) சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்கு பக்தாத்திலுள்ள சிறைக்கூடமொன்றை படம்பிடித்த போது இவர் சுடப்பட்டார்.

அவரது கமெராவை ஒரு ஏவுகணை செலுத்தி என தவறுதலாக இனங்கண்டு கொண்ட அமெரிக்கப் படையினரே இவரைச் சுட்டனர் என்பதை இராணுவம் கடந்த ஞாயிறன்று ஏற்றுக்கொண்டது.

சம்பவதினத்துக்கு முன்னைய தினம் அப்பகுதியில் மோட்டார் குண்டினால் தாக்கப்பட்டு 6 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதுடன் 59 பேர் காயமடைந்திருந்தனர். இச் சம்பவத்தைக் கேள்வியுற்றே செய்தியாளர்கள் குறிப்பிட்ட பகுதிக்குச் சென்றிருந்தனர்.

சிறைக்கூடத்திற்குள்ளே செல்வதற்கு அனுமதி வழங்கப்படாததால் மாசேன் வெளியே இருந்து படம் பிடிக்க முயன்றுள்ளார்.

ஆனால், இவர் படம் பிடிப்பது உள்ளேயிருக்கும் அதிகாரிகளுக்குத் தெரியாது. அதனால் அவர்கள் கமெராவை ஏவுகணை செலுத்தி என நினைத்து சுட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

# முஸ்லிம் பெண் பொலீஸ் முக்காடணிய அனுமதி கோருகிறது இஸ்லாமிய சபை

அமெரிக்காவில் பொலீஸ் அதிகாரியாகக் கடமையாற்றும் இஸ்லாமியப் பெண் ஒருவர் தலையில் முக்காடு அணிந்து கொள்ள அனுமதி வழங்க வேண்டும் என்று அமெரிக்க இஸ்லாமிய உறவு மேம்பாட்டு சபை பிலடெல் பியா பொலீஸாருக்குக் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 98 ஆம் ஆண்டு கடமையில் சேர்ந்த இஸ்லாமிய பெண் ஒருவருக்கு அவரது மதத்தைப் பேணும் வகையில் தலையில் முக்காடு அணிவது உட்பட சிலவற்றுக்கு அனுமதி அளிக்கும்படி மேலதிகாரிகளிடம் பலமுறை கோரியிருந்தார்.

ஆனால், அதிகாரிகள் அவற்றை நிராகரித்துவிட்டனர்.

கடந்த வாரம் அவர் ரோந்துக் கடமைக்குச் சென்ற போது ஸ்கார்ப் அணிந்து சென்றதற்கு அதிகாரிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் அவரை கடமையில் இருந்து வீட்டுக்கு அனுப்பிவிட்டனர்.

அவர் முக்காடு அணிந்து கடமைக்கு வந்தால் வேலை நீக்கம் செய்யப்படுவார் என்று மிரட்டியுள்ளனர்.

இது குறித்து கடந்த வாரம் பிலடெல்பியா பொலீஸ் அதிகாரிக்குக் கடிதம் எழுதியுள்ளோம். இந்த முஸ்லிம் பெண் பொலீஸ் அதிகாரியின் பிரச்சினை குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளோம். அத்துடன் சீருடை விடயத்தில் சில திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும் என்றும கோரியுள்ளோம். என்றுள்ளது.

அமெரிக்காவில் தீயணைப்புத் துறை உட்பட பலதுறைகளில் முஸ்லிம் பெண்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

உலக அரங்கில்

# கொலம்பிய ஜனாதிபதி சென்ற ஹெலி மீது சூடு

பகோடா,ஓக.19

கொலம்பிய ஜனாதிபதி அல்வரோ உருப் சென்ற ஹெலிகொப்டர் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். எனினும், ஜனாதிபதி உட்பட அந்த ஹெலிகொப்டரில் பயணஞ்செய்த அனைவரும் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

ஜனாதிபதி, நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்த போது இவ்வாறு நடைபெற்றுள்ளது.

அந்நாட்டில் தீவிரவாதிகள் 'கொலம்பிய புரட்சிப்படை' என்ற பெயரில் போராடி வருகின்றனர். கடந்த ஓகஸ்டில் பதவிக்கு வந்த ஜனாதிபதி அல்வரோ தீவிரவாதிகளை ஒடுக்குவதற்குச் சபதம் பூண்டு அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

'கொலம்பிய புரட்சிப்படை' ஒரு விவசாய கிளர்ச்சிப்படையாகும். இது அந்நாட்டில் சோசலிஷ சீர்திருத்தங்களை நாடியுள்ளது.

# லைபீரியாவில் இடைக்கால நிர்வாகம்; கிளர்ச்சிப் படையினர் இணக்கம்!

லைபீரியாவின இடைக்கால நிர்வாகம் தொடர்பாக கிளர்ச்சியாளர்கள் ஐ.நா. பேச்சாளர்களுடன் உடன்பாடு கண்டுள்ளனர். இத்தகவலை ஐ.நா. அலுவலகம் தெரிவித்தது.

உடன்படிக்கை நேற்று ஒப்பமிடப்படவிருந்தது. ஜனாதிபதி ரெய்லர் நாட்டைவிட்டு வெளியேறி ஒரு வார காலத்தின் பின்னர் இந்த உடன்பாடு காணப்பட்டுள்ளது.

ஜனநாயக தேர்தல் நடைபெறலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். கிளர்ச்சியாளர்கள் (லேர்ட் அமைப்பினர்) பிரதி சபாநாயகர் பதவியைக் கோரியுள்ளனர். இம் மாத ஆரம்பத்தில் அவர்கள் உப ஜனாதிபதி பதவியையே கோரியிருந்தனர்.

எனினும், ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளை வழங்க ஐ.நாவும் அமைதிப்படையும் விரும்ப வில்லை.

தற்போது அமைக்கப்படவிருக்கும் இடைக்கால அரசு 2 வருடங்கள் நீடிக்கும் என்று நம்பப்படுகின்றது.

இதேவேளை -

லைபீரியாவிற்கு மனிதாபிமான உதவிகள் வந்து சேரத்தொடங்கியுள்ளன. மனிதாபிமான பணிகளுக்கு உதவுவதற்கென மேலும் 100 நைஜீரியப் படைகள் லைபீரியாவில் வந்து இறங்கியுள்ளன.

இவர்களுடன் சேர்ந்து அங்குள்ள அமைதிப் படையினரின் மொத்த எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது.

உலக உணவுத்திட்டம் லைபீரியாவுக்கு 40 தென் நிறையுள்ள உணவுப் பொருள்களை விநியோகித்துள்ளது.

# அல்கெய்டா முக்கிய நபரான ஹம்பாலிமனைவியிடம் விசாரணை

கோலாம்பூர்,ஓக.19

அல்கெய்டா இயக்கத்தின் உயர்மட்டத் தலைவர்களுள் ஒருவரான ஹம்பாலி கடந்தவாரம் தாய்லாந்தில் பிடிபட்டார்.

இவர் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்டார். இதேவேளை ஹம்பாலியின் மனைவி நோரல் விசாக் விசாரணைகளுக்காக மலேஷியா கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கணவர் ஹம்பாலி கைது செய்யப்பட்டபோது அவருடன் அடையாளம் காணப்படாத பெண்ணும் உடனிருந்தார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்தப் பெண் ஹம்பாலியின் மனைவி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மலேஷியாவைச் சேர்ந்தவர். பெயர் நோரல் விசாக் லீபின்சென் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தார். ஹம்பாலியின் கைதுக்குப் பின்னர் நோரல் மலேஷியா சென்றார். அவரை மலேஷியப் பொலீஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பின்லேடன், முல்லா ஓமர் நலம்

# அல்கெய்டா அமைப்புப் பேச்சாளரின் ஒலிநாடா அல்-அராபியாவில் ஒலிபரப்பு!

அல்கெய்டா அமைப்பின் பேச்சாளர் பேசியதாகக் கூறப்படும் ஒலி நாடாவொன்றை அல்-அராபியா தொலைக்காட்சி ஒலிபரப்புச் செய்தது.

அதில் ஈராக்கியரை அமெரிக்கப் படைகளுக்கெதிராக செயற்படுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அல்கெய்டாவின் பேச்சாளரான அபூ அப்டெல ரஹ்மான்-அல்நஜ்டி என்பவரே இவராவார். அவர் ஒலிநாடாவில் மேலும் கூறியுள்ளதாவது:-

ஈராக் வீழ்ந்ததை முழு உலகமுமே பார்த்துக் கொண்டிருந்தது. அதேபோல் அமெரிக்காவுக்கு நீங்கள் (ஈராக் மக்கள்) காட்டும் எதிர்ப்பையும் உலகம் அவதானித்துக் கொண்டுள்ளது. நீங்கள் தொடர்ந்து போராட வேண்டும்.

அமெரிக்கா, ஈராக் யுத்தத்திற்குப் பின்னர் மட்டுமல்ல முன்னரும் உரிமைகளை மீறிச் செயற்பட்டது - என்று கூறியுள்ளார்.

அத்துடன், தலிபான்களின் தலைவர் முல்லா ஓமர், அல்கெய்டா தலைவர் பின்லேடன் ஆகியோர் நலமாக இருப்பதாக ஒலிநாடாக் குரல் தெரிவித்துள்ளது.

# கார்கிலில் படைகுவிப்பு பாகிஸ்தான் குற்றச்சாட்டு

எல்லைப்பகுதியில் இந்தியா தனது படைகளைக் குவித்து வருகின்றது என்று பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்துடன், இந்தியாவின் இந்தச் செயல் இரு நாடுகளுக்கும் இடையில் உருவாகிவரும் சுமுக உறவை மோசமாகப் பாதித்துவிடும் என்றும் பாகிஸ்தான் எச்சரித்துள்ளது.

சிராஸ், கார்கில் ஆகிய இடங்களில் இந்தியப் படைகள் குவிக்கப்படுகின்றன என அந்நாட்டுச் செய்தி நிறுவனமான 'ஏ.பி.பி' செய்தி வெளியிட்டுள்ளது. இந்தச் செய்தி இரகசியப் புலனாய்வுத்துறையினரை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டது.

இத்தகவல் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் பகுதியிலிருந்து கிடைத்தது என்று அச்செய்தி கூறுகின்றது.

# மேற்குக்கரை நகரங்களை கையளிப்பதில் பின்னடைவு!

மேற்குக்கரை நகரங்களிலிருந்து படைகளை வாபஸ் பெற்று பலஸ்தீனத்திடம் கையளிப்பதில் காணப்பட்டிருந்த இணக்கம் சீர்குலைந்துள்ளது.

இதற்குக் காரணம் இந்த நான்கு நகரங்களைச் சுற்றிலுமுள்ள சோதனை நிலைகளை இஸ்ரேல் கைவிட மறுத்துவிட்டமையே ஆகும்.

பலஸ்தீனத் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் பலஸ்தீனிய தலைமை இறுக்கம் காண்பித்தால் அடுத்து வரும் சிலதினங்களில் ஜெரிகே, கல்ஹிலியா ஆகிய நகரங்களிலிருந்தும் இம்மாத இறுதிக்குள் ரமல்லா, ருல்கார் ஆகிய நகரங்களிலிருந்தும் படைகள் வாபஸ் பெறப்படும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதேவேளை - பலஸ்தீன தீவிரவாதிகளை நிராயுதபாணிகளாக்குவதற்கும் குழுக்களை கலைத்து விடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இஸ்ரேல் வாஷிங்டனுடன் இணைந்து கோரிக்கை விடுத்து வருகின்றது.

# கோகோ கோலா, பெப்ஸி விவகாரம்; குளிர்பானங்களுக்கு புதிய தரக்கட்டுப்பாடு

குளிர்பானங்களுக்கு புதிய தரக்கட்டுப்பாட்டை அறிமுகப்படுத்த இந்திய மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

கொகோ-கோலா, பெப்ஸி உள்ளிட்ட வெளிநாட்டு குளிர்பானங்களில் பூச்சி மருந்து கலந்திருப்பதாக டெல்லி அறிவியல் மையம் சமீபத்தில் கூறியது.

இதனையடுத்து, அந்நிறுவனங்கள் மாதிரி பரிசோதனைக் கூடங்களில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

இது ஒரு புறமிருக்க,

இந்தியத் தரக்கட்டுப்பாட்டுச் சபை உயர் அமைப்பின் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் குளிர்பானங்களுக்கு புதிய தரக்கட்டுப்பாட்டைக் கொண்டுவர ஆலோசிக்கப்பட்டது.

## கழுதை பூட்டிய தேரில் ஆபிரிக்க மன்னர் பவனி

தென்னாபிரிக்காவின் பழங்குடி இனங்களுள் ஒன்றான பபோகெங்கின் 36ஆவது மன்னராக லெருவொ ஷெகாடி மோலோ நேற்று முன்தினம் முடிசூடிக்கொண்டார்.

புதிய மன்னர் கழுதைகள் பூட்டிய வண்டியில் முடிசூட்டு விழாவுக்கு வந்து அசத்தினார். இந்த விழாவில் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி மண்டேலா, தற்போதைய ஜனாதிபதி தபோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## சீனாவில் பூகம்பத்தால் 1000 பேருக்கு காயம்

பெய்ஜிங்,ஓக.19

வடசீனாவின் மொங்கோலியாப் பகுதியை கடந்த சனியன்று தாக்கிய பூகம்பத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆகவும். காயமடைந்தோர் எண்ணிக்கை 1,000 ஆகவும் அதிகரித்துள்ளது.

இங்கு 6 லட்சம் பேர் வாழ்கின்றனர். இதனால் 1.38 பில்லியன் யுவான் இழப்பு ஏற்பட்டது. 7,912 வீடுகள் இடிந்தழிந்தன. 83,000 வீடுகள் சேதத்திற்குள்ளாயின 5.9 றிசடர் அளவில் நடுக்கம் ஏற்பட்டிருந்தது.

## பல்கலையில் சகல பரீட்சைகளும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பரீட்சைகளும் மறு அறிவித்தல் வரும்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என பல்கலைக்கழக பதில் பதிவாளர் திருமதி அ.சிவநேசன் தெரிவித்துள்ளார். (எ-1..)

## தங்குமிட வசதியின்றி ஆசிரியர்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,ஓக.19

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்குவதற்கு தங்குமிடவசதி இல்லை என்று கூறப்படுகிறது.

இதனால் குறிப்பிட்ட ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாடசாலையின் கட்டடங்கள், விடுதிகள் அனைத்தும் பலத்த சேதமடைந்தமை தெரிந்ததே.

அத்துடன் அவற்றை மீள்புனர்நிர்மாணம் செய்வது குறித்து இதுவரை எதுவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் ஆரம்பிக்கப்படவில்லை. (எ)

## வல்லிபுர ஆழ்வாரில் கிருஷ்ணஜெயந்தி

வடமராட்சி, ஓக.19

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாளை புதன்கிழமை இரவு கிருஷ்ணஜெயந்தி உற்சவம் நடைபெறும்.

அன்றையதினம் இரவு 'கண்ணன காட்டிய வழி' என்ற தலைப்பில் ஹாட்லிக்கல்லூரி ஆசிரியர் க.சிவநாதனின சொற்பொழிவும், 'தீர்க்கசுமங்கலி' என்ற தலைப்பில் எஸ்.சத்தியதாசனின் வில்லுப்பாட்டும் இடம்பெறும்.

தொடர்ந்து நள்ளிரவு கண்ணன் பிறப்பு தரிசனமும், 1008சங்காபிஷேகமும், குழந்தை தாலாட்டும் நிகழும். பின்னர் நாள் சரக்கு நிவேதனம் வழங்கப்பட்டு அதிகாலை கண்ணன் வெண்ணெய் திருடும் உற்சவத்துடன கிருஷ்ணஜெயந்தி நிறைவுறும். (எ-173)

## நீரிறைக்கும் இயந்திர கொள்வனவுக்கு நிதி

சண்டிலிப்பாய்,ஓக.19

திருநெல்வேலி லயன்ஸ் கழகம் அண்மையில் யாழ். நாவலர் கலாசாரமண்டபத்தில் நடத்திய அறக்கொடை வழங்கல் வைபவத்தில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்கு நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக 30 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

கனடா நாட்டில் வசிக்கும் கனடா வின்கெயர் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.வி. செல்வராசா இதற்கான நிதியை ஆச்சிரம பிரதிநிதியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 13வலுவிழந்தவர்களுக்கு 13முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. (எ-135)

## பதவிநிலை அதிகாரிகளின் சொத்து விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி திணைக்களங்களில் கடமையாற்றும் பதவிநிலை அதிகாரிகளின் சொத்து விவரம் பெறப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ. து.விஜயலட்சுமி மேற்கொண்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் உள்ளூராட்சியைச் சேர்ந்த பதவிநிலை அதிகாரிகளின் நிதிமோசடி, ஊழல்போன்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து நிதி அமைச்சின் செயலாளர் விடுத்தவேண்டுகோளையடுத்தே அதிகாரிகளின் சொத்து விவரம் சேகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விவரங்களை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சகல உள்ளூராட்சித் திணைக்கள தலைவர்களும் வழங்கும் பொருட்டு சொத்து விவரங்களை 'மெய்நிலையில்' கூறும்படி கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்கள் மாகாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளிடம் முதற் கட்டமாகவும்- ஏனையோரிடம் படிப்படியாகவும் பெறப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-185)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த பின்னரே இனிமேல் ஐ.தே.கவுடன் தேர்தல் கூட்டு

## சம்மாந்துறையில் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

நிந்தவூர்,ஓக.19

"ஐக்கிய தேசியக் கட்சியோடு இன்னுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தம செய்துகொள்ளாமல் இனிவரும் எந்தத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்தக் கட்சியுடன் இணைந்து போட்டியிடப் போவதில்லை. ஒன்றரை வருடகாலத்திற்கு மேலாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தி அதன்மூலம் பெற்ற பாடங்களிலிருந்தே இந்த நிலைப்பாட்டிற்கு நாம் வந்துள்ளோம்."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம்.

சம்மாந்துறையில் கடந்த வெள்ளிகிழமை நடைபெற்ற அபிவிருத்திப் பெருவிழாப் பொதுக்கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினா சட்டத்தரணி எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் தலைமையில், சம்மாந்துறை ஹிஜ்ரா சந்தியில் அமைந்துள்ள அஸ்ஸஹீத் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் அரங்கில் இந்த பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இப்பொதுக் கூட்டத்திற்கு முன்னா இடம்பெற்ற அபிவிருத்தி விழா தொடர்பான பல்வேறு நிகழ்வுகளிலும அமைச்சர் ஹக்கீமுடன், அமைச்சர்களான மிலிந்த மொறகொட, முஹம்மட் மஹ்றூப் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அபிவிருத்தி விழாப் பொதுக் கூடடத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாட்டில் தேர்தல்கள் அடுத்தடுத்து வந்து கொண்டிருக்கப்போகின்றன. இன்றிருக்கும் சூழலில், ஐக்கிய தேசிய முன்னணி அரசு அடுத்த வருடம் ஜனவரியில் அல்லது அதற்கு முன்னதாக ஐந்து மாகாணசபைத் தேர்தல்களைச் சந்திக்க நேரிடும்.

இந்த ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களும் ஐக்கிய தேசியக கட்சி தொடர்ந்தும் ஆட்சியிலிருக்கப் போகிறதா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கப்போகின்றன.

இந்தத் தேர்தல்களில் வடக்கு கிழக்கிற்கு வெளியேயுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கின்ற வாக்குகள் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியையும் தோல்வியையும் தீர்மானிப்பதற்கு போதும். இதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை புரிந்துகொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் - அதாவது அரசின் - தலைமைத்துவம இன்று எமது பிரதேசங்களின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கவில்லை என்பது பற்றியோ அல்லது அதன் அலட்சியப்போக்கைப் பற்றியோ முஸ்லிம் காங்கிரஸ் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை என்றாலும், அது முஸ்லிம்களின் பாதுகாப்புக் குறித்துத் தொடர்ந்தும் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவிருந்தால் சரியான பதிலை அடுத்த தேர்தல் ஒன்றுக்கு முன் அது சொல்லியாக வேண்டும்.

ஏனெனில், இன்னுமொரு புரிந்



துணர்வு ஒப்பந்தமில்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியோடு எந்தத் தேர்தலிலும் இனி முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடாது. வடக்கு-கிழக்கில் எந்த அடிப்படையிலும் முஸ்லிம் மக்களின் ஆணையைப் பெற்ற சக்தியிடம்தான் முஸ்லிம் பிரதேச ஆதிக்கம் கொடுக்கப்படவேண்டும். இந்த - முதலாவது - நிபந்தனை இத்தகைய ஒப்பந்தத்தில் ஐக்கிய தேசியக்கட்சிக்குக் கொடுக்கப்பட்டே ஆகவேண்டும்.

சமாதானப் பேச்சு ஆரம்பித்த காலத்திலிருந்து அதில் அரசு கடைபபிடித்துவரும் நெகிழ்வுப்போக்கு விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுக்களில் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்ற அங்கலாய்ப்பினால் தான். என்றாலும், மனவேதனையோடும பலத்த விமர்சனங்களுக்கு மத்தியிலும் அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு இதுவரை காலமும் அரசை நாம் பாதுகாத்து வந்துள்ளோம்.

ஆனால், தொடர்ந்தும் - விவஸ்தை இல்லாமல் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவமும், கட்சியும் இந்த அரசைப் பாதுகாப்பதற்காகவும், அதைத் தேர்தல்களில் வெற்றிபெறச் செய்வதற்காகவும் ஆதரவை வழங்கிக் கொண்டிருக்க முடியாது.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவென்பது வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க முடியும். இதை வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களுக்கும் உணர்த்தியாக வேண்டும்.

அடுத்துவரவிருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் அழுதம் கொடுக்கத்தக்க தேர்தல்களாக மாற்றவேண்டும்.

நாங்கள் கேட்பது முஸ்லிம்களின பாதுகாப்பு, முஸ்லிம்களின் சுயாட்சி ஆகிய நியாயமான கோரிக்கைகளைத் தான். இதற்கு அரசு ஆதரவு தந்து விடுதலைப் புலிகளுடன் தீர்வுக்குவரும் பொழுது அந்தத் தீர்வில் முஸ்லிம்கள் சார்பில் அழுத்தத்தை முற்று முழுதாகப் பிரயோகித்தே ஆகவேண்டும்.

அன்றேல் முஸ்லிம்களுடைய நிரந்தரமான - நிம்மதிக்கான - தீர்வை நியாயப்படுத்துகின்ற தரப்பு எது என்பதை அடையாளப்படுத்துவதே எதிர்காலத்தின் முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கும் முக்கிய பொறுப்பாக இருக்கும். அதற்காகச் சமாதானத்தை குலைத்துவிட்டு யுத்தத்தைக் கொண்டுவந்து எமது இலக்கைச் சாதிக்க வேண்டுமென்பது முஸ்லிம் காங்கிரஸின் நோக்கம் அல்ல. அப்படியிருந்திருந்தால், இதுவரை என்னென்னவோ முடிவுகளையெல்லாம நாம் எடுத்திருப்போம். ஆனால், பொறுமையுடன்தான் நாம் இருந்து வந்துள்ளோம்.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுக்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. இந்தப் பேச்சுக்களின் போது அரசின் போக்கை அவதானிக்கப் போகின்றோம். இடைக்கால நிர்வாக சபை குறித்து நோர்வே ஏற்பாட்டாளர்களிடம் கொடுத்திருக்கும் கோரிக்கை இன்னமும் அமுல்படுத்தப்படவில்லை. எனினும், அரசு அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல் இருக்கிறது. இதையெல்லாம் முஸ்லிம் காங்கிரஸ் அவதானித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்படியான தொடர்நெகிழ்வுப்போக்கோடு அரசு நடந்து கொள்வதை நாம் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

தமிழர்கள் வேண்டிநிற்கும் வடக்கு-கிழக்கில் அவர்கள் ஏன் முஸ்லிம்களோடு தமது சுயாட்சியைப் பங்கு போட்டுக் கொள்ள முடியாது?

முழுநிலத்தையும் தமது மேலாதிககத்துக்கு தரவேண்டுமென்ற அழுத்தத்தோடு ஏன் தமிழர்கள் நிற்கவேண்டும்?

இவ்வளவு அநியாயங்கள், அட்டூழியங்கள் நடந்தபிறகும் எப்படி முஸ்லிம்கள் புலிகளின் மேலாதிக்கத்தின் கீழ் நியாயம் கிடைக்குமென நம்பிப் போய் அங்கு வாழமுடியும்? இவற்றையெல்லாம் எல்லோரும் உணரவேண்டும்.

இதற்கான ஆணையை விடுதலைப் புலிகள் என்றோ ஒருநாள் தேர்தலொன்றைச் சந்திக்கும்பொழுது முஸலிம்களிடத்திலே பெறுவதற்காக இவர்கள் தமது நடவடிக்கைகளை இன்றிலிருந்து மாற்றிக்கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளின் அபிலாசைகளுக்குக் குறுக்கே நின்று தமது இலக்குகளை அடையவேண்டுமென்று எத்தனித்தது கிடையாது.

ஆனால், எமது பிரதேசங்களைப் பலவந்தமாக ஆட்சிசெய்வதற்கு விடுதலைப் புலிகளை அனுமதிக்கப் போவதில்லையென்ற - எமக்கே உரித்தான - நியாயமான - கோரிக்கை ஒன்றை முன்வைக்க முஸ்லிம் காங்கிரஸ் தயங்கப்போவதுமில்லை.

அதேபோல் யுத்த காலத்தில் முஸலிம்களோடு மோதுவதும், சமாதான காலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவுகளை சரிசெய்கின்ற முயற்சிகளில் ஈடுபடுவதும், பின்யுத்தம் நடக்கும்போது முஸ்லிம்களை மீண்டும் பழிவாங்குவதுமாகப் புலிகளின் பட்லம் தொடரக்கூடாது. இதை நேசத்துடன் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இந்தச் சூழலில் முஸ்லிம்களைப் பாதுகாக்கும் கடமை அரசுக்கு உண்டு. முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு பங்கமில்லாமல் நடக்கின்ற ஓர் அரசியலை விடுதலைப் புலிகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

தமது நடவடிக்கைகள் மூலம் முஸ்லிகளுடைய அரசியல் அபிலாசைகளை நசுக்கமாட்டோம், நசுக்கமாட்டோமென்று வெறும் உதட்டளவில் பேசிக்கொண்டிருக்கின்ற ஓர் இயக்கமாக விடுதலைப் புலிகள் அமைப்பு இருக்கக் கூடாது, இருக்க முடியாது.

- இவ்வாறு அமைச்சர் ஹக்கீம் கூறினார். (எ)

## கள்ள நோட்டுக்களுடன் கம்பஹாவில் இருவர் கைது

கம்பஹா மாவட்டம், வெலிவேரியா என்ற இடத்தில் 13 லட்சம் ரூபா கள்ள நோட்டுக்களை மாற்ற முயன்ற இரு நபர்கள் கம்பஹா பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இப்போலிப் பணத்தினைக் கொடுத்து அதற்குப் பதிலாக இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நல்ல நோட்டுக்களைப் பெறமுயன்ற சமயத்திலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் இதற்கு முதலிலும் இவ்வாறு கள்ள நோட்டுக்களை மாற்றியுள்ளார்கள் எனவும் இப்போலிப் பணநோட்டுக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது பாவனையில் உள்ளன எனவும் கம்பஹா பொலீஸார் தெரிவித்துள்ளார்கள். (ம-12)


31ஆம் நாள் நினைவஞ்சலி

உதயம் 02 - 01 - 1957



அஸ்தமனம் 20 - 07 - 2003

திருமதி
பரமேஸ்வரி சூரியகுமார்
(கிளி ரீச்சர் - சாந்தநாயகி வித்தியாசாலை - மட்டுவில்)

வாழவேண்டிய
வசந்த காலங்கள் - மீதமிருக்க
பந்த பாசங்களைத் துறந்து
நீவிர் சென்றாலும்
எம் உள்ளங்களில்
என்றும் உமது அன்புருவம்
நிலைத்திருக்கும்.

"மணியம்வளவு",
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

கணவர்,
(21476) (25) சகோதரி, பெறாமக்கள்.



வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணக வாழ்வில் 25 - 09 - 1920



விண்ணக வாழ்வில் 20 - 07 - 2003

திருமதி இராசேந்திரம் செல்லம்மா

*அன்போடும் பண்போடும் வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

எமக்காகவும் உறவினர், அயலவர்களுக்காகவும் வாழ்ந்து இறைபதமெய்திய எமது அன்னையான அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு உள்ளூரிலும், வெளியூரிலுமிருந்தும் எமக்கு ஆறுதல் கூறியவர்கள், அஞ்சலி செலுத்தியவர்கள், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி எமது தேவைக்கேற்ப பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் குடும்பங்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து இடம்பெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.
(21541) (26-21-15-17)

இ.லோகேந்திரராஜா (மகன்),
இ.ஜெயராஜா (மகன்),
திருமதி லோ.கதிர்காமநாதன் (மகள்),
இ.சிறீராஜா (மகன்), குடும்பத்தினர்.

உதயன்

# கதிர்காமர் இப்போது இந்தியாவுக்கும் ஆலோசகர்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வெளிவிவகார ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர் ஒருவார கால சுற்றுப்பயணம் மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக அங்கு அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் குறித்து பல செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றை நோக்கும்போது, இலங்கை ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் இப்போது இந்திய அரசுக்கும் வெளிவிவகார ஆலோசகராக மாறிவிட்டாரோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அவ்வளவுக்கு புதுடில்லியில் நின்றுகொண்டு இந்தியாவுக்கு ஆலோசனைகளை அள்ளி வீசுகின்றார் அவர்.

"இலங்கை இனப்பிரச்சினைக்குச் சட்டரீதியாக எத்தகைய தீர்வைக் காணமுடியும் என்பது குறித்து இந்தியா தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதில் இந்தியா சரியாகச் செயற்படத் தவறுமானால் இலங்கையில் புதிய நாடு ஒன்று உருவாவதை இந்தியா பார்க்கநேரிடும்." - இந்தியாவை முன்கூட்டியே எச்சரிக்கைப்படுத்தும் போக்கில் அந்நாட்டின் தலைமைப்பீடத்துக்கு கதிர்காமர் வழங்கியிருக்கும் ஆலோசனைகளில் இதுவும் ஒன்று.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமரச முறையில் சமாதான நெறியில் - இணக்கத் தீர்வு ஒன்றை ஐக்கிய இலங்கைக்குள் காணுவதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

அந்த முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு எதிர்க்கட்சிகளின் தரப்பிலிருந்தும் அவற்றுக்குத் தலைமை வகிக்கும் ஜனாதிபதியின் பக்கத்திலிருந்தும் கிடைக்கவில்லை என்று இலங்கை அரசு அங்கலாய்க்கின்றது.

ஜனாதிபதி குமாரதுங்கவின் தரப்பு அதற்கு அப்பாலும் போய், சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற தென்னிலங்கைச் சக்திகளுடனும் கைகோர்த்து நிற்கின்றது.

ஆகவே, இங்கு களத்தில் - இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாண விடாமல் குழப்புகின்ற சக்திகளைத் தனது பக்கத்திலேயே வைத்து அவர்களை ஊதிவிட்டுக் கொண்டு, அப்பிரச்சினைக்குச் சட்டரீதியாக எத்தகைய தீர்வைக் காணமுடியும் என்பது குறித்து இந்தியா தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று அபாயச்சங்கு ஊதுகின்றார் கதிர்காமர். இது 'பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டும்' முயற்சி போன்றதாகும்.

சரியோ, பிழையோ தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லிம்களும் இந்த நாட்டின் பிரஜைகள், சகோதரர்கள், ஒரு தாய் மக்கள்.

தங்கள் தங்கள் இன உரிமைக்காகத் தங்களுக்குள் அவர்கள் மோதிக் கொண்டாலும் ஒரு மேசையில் அமர்ந்திருந்து அந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொள்ள அவர்கள் இணங்கியிருக்கின்றார்கள்; அதற்கான முயற்சியிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

எமது மண்ணுக்கு அந்நியமான இந்தியாவும் அதன் அரசும், இங்கு நமது நாட்டில் சகோதரர்களான நாம் நமக்குள் உள்ள பிரச்சினையைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு வெளியிலிருந்து ஆக்கபூர்வமான உதவிகளையும் உற்சாகத்தையும் தரமுடியும்.

ஆனால், சகோதரர்களாகிய தமிழர்களும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் தங்களுக்குள் பேசித் தீர்ப்பதற்கு வாய்ப்பளிக்காமல் - ஒத்துழைப்புத்தராமல் - அதைக் குழப்பிவரும் கதிர்காமரும் அவரது தரப்பினரும் அந்நிய சக்தியான இந்தியாவை இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிடச் செய்வதற்காக வெற்றிலை வைக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் வல்லாதிக்க நாடு இந்தியா. அதை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அந்த வல்லாதிக்கத்தின் வலிமையைப் பயன்படுத்தி 1987 இல் அது இலங்கை விடயத்தில் நேரடியாகத் தலையிட்டதும் இந்த அந்நிய சக்திகளுக்கு எதிராக சுதேசிகளான வடக்குத் தமிழரும் தெற்குச் சிங்களவரும் கொதித்தெழுந்ததும் அவற்றின் விளைவுகளும் கதிர்காமருக்கும், அவர் யாருக்கு ஆலோசகராக விளங்குகின்றாரோ அந்த ஜனாதிபதிக்கும் விளங்காத விடயங்கள் அல்ல.

இப்போது கதிர்காமர் கூறும் ஆலோசனைப் பாணியில் தான் அப்போதும் இலங்கைக்கான இந்தியத் தூதர் ஜே.என்.டிக்ஸிற் போன்றோர் இந்தியாவுக்கு ஆலோசனை வழங்கினர். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு செயற்பட்டதால் இந்தியத் தரப்பு எதிர்நோக்கிய விபரீதங்களையும், இலங்கை விடயத்தில் இந்தியா கையைச் சுட்டுக்கொண்டதையும் இந்தியாவின் தற்போதைய அதிகார வர்க்கம் மறந்துவிடக்கூடாது.

சுதேசிகளின் பிரச்சினைக்காக நாட்டுக்குள் விதேசிகளை வரவழைக்கும் இத்தகைய சேவை, நாட்டுக்கும் இனத்துக்கும் செய்யும் 'கோடரிக் காம்பு' பணியாகவே கருதப்படக் கூடியது.

இலங்கையில் புதிய நாடு உருவாவது தமக்கு விரும்பும் விடயம் என கதிர்காமரும், அவரது 'எஜமானரான' ஜனாதிபதியும் கருதுவார்களேயானால் - அதைத் தடுப்பதற்கு நாட்டுக்குள் அந்நியரான இந்தியாவின் தலையீட்டை வருந்தி அழைப்பதல்ல வழி. அது, அந்நியரை நமது நாட்டுக்குள் தலையிட வைக்கும் தேசவிரோதச் செயல்.

நாடு துண்டுபடாமல் ஐக்கிய இலங்கைக்குள் - அனைவரையும் சமத்துவமாக மதித்து, அனைவரும் சம உரிமையுடன் வாழ வகைசெய்யும் - ஒரு தீர்வை எட்டுவதே ஒரே வழி. அதற்காக முழு முயற்சியோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் செய்வதே ஒரே மார்க்கம். இதை அவர்கள் புரிந்துகொண்டு, அதன்படி செயற்பட முன்வரவேண்டும்.

### பருவ மழைக்கு முன்பதாக

# வழுக்கையாற்றுப் படுக்கையில் அமைந்துள்ள குளங்கள், வாய்க்கால்களைப் புனரமைக்குக!

## மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஓக.19

பருவ மழைக்காலம் ஆரம்பமாகும் முன்னர் வழுக்கையாற்றுப் படுக்கையிலுள்ள குளங்களின் வாய்க்கால்களையும் மற்றும் துருசுகளையும் துப்புரவு செய்யவும் புனரமைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் மாவட்ட நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது குறித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மாரி காலத்தில் இந்த வழுக்கையாறு அளவெட்டி பிணாக்கை குளத்தில் உற்பத்தியாகி கந்தரோடை, சங்குவேலி, கட்டுடை, மானிப்பாய், சங்கரத்தை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு ஊடாகச் சென்று அராலிக் கடலில் சங்கமிக்கிறது.

இந்த வழுக்கையாற்று' படுக்கையில் 15இற்கும் மேற்பட்ட சிறு குளங்கள், வாய்க்கால்கள்மூலம் ஆற்றுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாழ்க்கால்களில் தற்போது சிறு செடிகள், புற்கள் மற்றும் கழிவுப்பொருள்கள் இருந்து வருவதால் நீரோட்டத்திற்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், குளங்களில் மிதமிஞ்சிய நீர் வாய்க்கால் வழியாக வந்து வழுக்கையாற்றுடன் கலந்து ஓடுவதால் இவ் வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன், இங்குள்ள துருசுகளும் பழுதுபார்க்கப்பட்டு சரியான முறையில் செயற்படுவதற்காக மறுசீரமைக்கப்படவேண்டும்.

வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி.தென்மேற்கு மற்றும் வலி. மேற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளின் நெற்செய்கையில் இந்த வழுக்கையாற்றுப் படுக்கை முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

ஆகவே, இப்பிரதேசத்தின் குள வாய்க்கால்களைத் துப்புரவு செய்து புனரமைப்புச் செய்வதுடன், துரிசுகளையும் திருத்தி இயங்கக்கூடிய முறையில் அமைக்க வேண்டியது அவசியமாகும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் விவசாய வித்தகர் சி.பொ.மா.க. முதலியார் இந்தக் கடிதத்தை கடந்த வாரம் அனுப்பிவைத்துள்ளார். (எ-135)

# 3ஆண்டுகளின் பின் இம்முறை நாவற்குழியில் நெற்செய்கை

யாழ்ப்பாணம்,ஓக.19

கடந்த மூன்று வருடங்களின் பின்னர் நாவற்குழிப் பகுதியில் உள்ள நெற்செய்கை நிலங்கள் யாவும் பண்படுத்தப்பட்டு வருகின்றன.

2000 ஆம் ஆண்டு குடாநாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக அப்பகுதி மக்கள் அனைவரும் அங்கிருந்து இடம் பெயர்ந்திருந்தனர்.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியிலும் இந்த ஆண்டின ஆரம்பத்திலும் இப்பகுதிமக்கள் சிறிதுசிறிதாகத் தமது வீடுகளில் மீளக் குடியமரத் தொடங்கியதையடுத்துத் தமது நெற்செய்கை நிலங்களில் இம்முறை பயிர்ச்செய்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதன் முதற்கட்டமாகக் கடந்த சில தினங்களாகப் பெய்த மழையினைத் தொடர்ந்து நிலங்களைப் பண்படுத்தும் பணிகளில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நாவற்குழிப் பகுதியில் உள்ள பிச்சன் பள்ளம், தீபாய்ந்த பள்ளம், யாட்டாவளை, கம்பையன் மற்றும் நெணியன் ஆகிய நெற்செய்கை நிலங்களே பண்படுத்தப்பட்டு வருகின்றன.

கேரதீவு வீதியில் அமைந்துள்ள தச்சந்தோப்பு, வேலம்பிராய் பகுதியைச் சேர்ந்த மக்களும் தமது நெற்செய்கை நிலங்களைப் பண்படுத்தி வருகின்றனர்.

1999ஆம் ஆண்டின் பின்னர் செய்கை பண்ணப்படாமலும் பண்படுத்தப்படாமலும் இருந்த இந்த நிலங்களில் இம்முறையும் முழுமையான அறுவடையை எதிர்பார்க்க முடியாது என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-10)

# வன்னியில் ஆங்கில பாடநூல்கள் மாணவருக்கு வெறும் காட்சிப்பொருள்

## வவுனியாக் கூட்டத்தில் விளக்கம்

வவுனியா,ஓக.19

வன்னிப் பகுதியில் மாணவர்கள் ஆங்கிலப் பாடநூல்களை வெறும் காட்சிப் பொருளாகவே வைத்திருக்கிறார்கள்.

- இவ்வாறு தமிழீழக் கல்விக் கழக வவுனியா மாவட்டப் பொறுப்பாளர் ஞானம் தெரிவித்தார்.

வவுனியா சாமிமடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் தொடர்பான கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் உரை நிகழ்த்துகையில் அவர் கூறியதாவது:-

வன்னிப் பகுதி உட்பட வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் 4,000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருக்கிறது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதில் அரசு தொடர்ந்தும் பின்னிற்கிறது. இது எமது எதிர்கால சந்ததியினரை மிகவும் பாதிக்கிறது.

தமிழரின் வரலாற்றில் எதையுமே போராடியே பெறவேண்டிய நிலையே இருக்கிறது. இந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிலையும் அவ்வாறேதான் இருக்கிறது.

பல்லாண்டுகளாகப் பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலேயே மாணவர்கள் கல்வியைத் தொடர்கிறார்கள். மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு ஆசிரியர்களின் நியமனம் மிக முக்கியமானது. அவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு அனைவரும் ஒன்று சேர்ந்து போராடவேண்டும். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவேண்டும்- இவ்வாறு கூறினார் ஞானம்.

கூட்டத்தில் வவுனியா மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், ராஜா குகனேஸ்வரன், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு, தெற்கு பிரதி கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களின் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் சங்க நிர்வாகிகளும், உறுப்பினர்களும், பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜா குகனேஸ்வரன் கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:-

அடுத்த வரவு - செலவுத் திட்டத்துடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 600இற்கு மேற்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

இதுகுறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதி அளித்திருக்கிறார். கடந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12பேர் ஒன்றாக சந்தித்தபோது அவர்களுக்கு இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது. நிச்சயமாக பிரதமர் இதனைச் செய்வார் என்று நான் நம்புகிறேன் - இவ்வாறு அவர் கூறினார்.

வவுனியா தெற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன்னையா கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சமூகம் மட்டும் தனித்து நின்று போராடுவதானது எந்தவிதமான பயனையும் தராது. ஆசிரியர் சமூகம், மாணவர் சமூகம் என்று அனைவரும் ஒன்றுசேர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் போர்க்கொடி தூக்கவேண்டும். அப்போதுதான் விடிவுகிடைக்கும் - இவ்வாறு அவர் கூறினார்.

### நாளை

ஆவணி 03
புதன்கிழமை
(20.08.2003)
திதி : அட்டமி
முன்னிரவு 07.17வரை
நட்சத்திரம: கார்த்திகை
முன்னிரவு 09.31 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 -01.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தனிமையில் மகிழ்ச்சியாக இருப்பவன் காட்டு மிருகமாக இருக்கவேண்டும் அல்லது கடவுளாக இருக்கவேண்டும்.

# கழுத்து நெரித்து 'பசு' படுகொலை

## காரைநகரில் புதனன்று அவலம்

யாழ்ப்பாணம்,ஓக.19

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வழங்கப்பட்ட பசுமாடு ஒன்று இனம் தெரியாதவர்களால் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை ஈழத்துச் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள வளவில் இடம்பெற்றுள்ளது.

இந்து கலாசார அமைச்சினால் ஆலயத்திற்காக வழங்கப்பட்ட சுமார் 15 போத்தல் பால் கறககக்கூடிய பசுவே தென்னைமரத்துடன் கயிற்றினால் இணைத்து சுருக்கிட்டு கொலை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பசுவினைப் பராமரித்து வந்த நபர் அப்பகுதி கிராமசேவையாளரிடம் முறையிட்டுள்ளார். இந்தப் பசு கடந்த 30 நாள்களுக்கு முன்னரே கன்று ஒன்றினை ஈன்றிருந்தது. (எ)

# தம்பாலை இந்து மயானம் மீண்டும் மக்கள் பாவனைக்கு!

வளலாய்,ஓக.19

தம்பாலை இந்துமயானம் நீண்டகால இடைவெளியின் பின்னர் மீண்டும் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து விடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமாக யுத்தசூனியப் பிரதேசமாகிய இந்தப் பகுதி எங்கும் பற்றைகள் வளர்ந்து காணப்பட்டது. அத்துடன், படையினரும் குறிப்பிட்ட மயானத்துக்குச் செல்லும் வீதியில் முட்கம்பி வேலிகளை அமைத்திருந்தனர்.

தற்போது அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த பொதுமக்கள் இந்துமயானத்தை மீண்டும் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிடவேண்டும் எனப் படையினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட படையினர், மயானப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த மிதிவெடிகளை அகற்றியதுடன், மயானத்தை மக்களின் பாவனைக்கு அனுமதித்துள்ளனர். (எ-178)

உ

# அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பொதுச் சபைக்கூட்ட அறிவித்தல்

மேற்படி ஆலயத் தேர்த் திருப்பணிச் சபை ஒன்றை தெரிவு செய்வதற்கு, பொதுச்சபையினது கூட்டம் ஒன்று 07.09.2003 ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு (பு.நே.) ஆலய மண்டபத்தில் நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.

பொதுச்சபை உறுப்பினர்கள் யாவரும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

- செயலாளர்.

19.08.2003 (21560) (26-21-19-15)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 22 - 07 - 1917



உதிர்வு 20 - 07 - 2003

## அமரர் சின்னத்தம்பி செல்லர்

(முன்னாள் கிளை முகாமையாளர், கொடிகாமம் ப.நோ.கூ.சங்கம்)

முப்பத்தொரு நாளாச்சோ நீர் எமை விட்டுப் பிரிந்து
ஆண்டு பல சென்றாலும் உங்கள் நினைவு மாறவே மாறாது.
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.08.2003) நடைபெறும் மதியபோசனத்தில் யாவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

மனைவி - செல்லம்மா
மகன் - தங்கராசா
மருமகள், பேரப்பிள்ளைகள்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (21501)(21-19-15)

# அந்தியேட்டி அழைப்பும் நினைவஞ்சலியும்



மலர்வு 13 - 01 - 1930

உதிர்வு 21 - 07 - 2003

## திருமதி இராசையா கமலம்

கண்ணின் கருவிழிபோல் எம்மை என்றும்
காத்து நின்று கருணை மழைபொழிந்த அம்மம்மா
காணாத தூரத்துக்கு உறவெல்லாம் - பிரிந்ததென
கலங்கி நீ - தவித்தாயோ?
மண்ணதனில் உன்வுருவம் மறைந்து - நீ
விண்ணுலகம் சென்றிட்டாலும் - மீண்டும்
எம் உறவுகளின் கருவினிலே என்றோ
உருவெடுப்பாய் எனக் காத்திருப்போம் - நாம்.

பேரப்பிள்ளைகள்:
கோபி, சங்கரி, யசோதா.

நாளை (20.08.2003) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனைகளிலும், கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

த.செல்வலிங்கம்,
தம்பியோடை,
வலிகிழ், காவெட்டி.
T.P.2263135.

- குடும்பத்தினர்.

(சி-29604)(26-21-19-15)

# இவ்வருட நிதி ஒதுக்கீடு இதுவரை இல்லை

யாழ் மாவட்ட சுகாதார சேவைகள திணைக்களத்தினால் இவ்வருடம் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி இன்னமும் மாகாண அமைச்சினால் வழங்கப்படவில்லை.

இதனால் இவ்வருடம் திணைக்கள நிறுவனங்களில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகள் இன்னமும் மேற்கொள்ளமுடியவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த வருடமும் வருட இறுதியில் இந்நிதி வழங்கப்பட்டதால் பல அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியாத நிலையில் நிதி திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# வாய்க்கால் புனரமைப்பு

மாசேரி கரவில் பழுதனை வாய்க்கால் புனரமைப்பு வேலைகள் தற்சமயம் மாசேரி விவசாய சம்மேளனத தின் மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பொது மக்களின் பங்களிப்புடன் இந்த புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.(எ-170)

# சுழிபுரத்தில் தமிழகச் சிற்பிகள்

சுழிபுரம், பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய கோபுர தூபிகளில் சிற்பங்கள் செய்வதற்காக தமிழகத்தில் இருந்து நான்கு சிற்பாசாரியார்கள் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் ஆலயத்தில தங்கியிருந்து வேண்டிய சிற்பங்களை வடிவமைக்கவுள்ளனர்.(எ-28)

# கட்டடவேலை பூர்த்திக்கு ரூ.35 லட்சம் தேவை என மதிப்பீடு

வல்வெட்டித்துறை நகரசபை கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய மேலும் 35 லட்சம் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மேற்படி நகரசபையின் நிர்வாக உத்தியோகத்தர் செ.திருஞானசம்பந்தர் அண்மையில் இடம் பெற்ற உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

நவீன வசதிகளுடன் கூடியதாக ஒரு கோடி ரூபா செலவில் வல்வெட்டித்துறை நகரசபைக்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-185)


உ
ஓம் ஸ்ரீ சாயிராம்!

CEYLON MEDICAL COLLEGE COUNCIL
PHARMACIST'S (EXTERNAL) EXAMINATION 2004/2005

புதிய வகுப்புகள், மீட்டல் வகுப்புகள்
ஆரம்பம்: 28.08.2003 வியாழக்கிழமை காலை
SAI RAM PHARMACY, EDUCATION COLLEGE OF DEGREE STUDIES
57/13, STANLEY ROAD, JAFFNA

ஸ்ரீராம் பார்மஸி
பட்டப்படிப்புகள் கல்லூரி

குறைந்தபட்ச தகைமைகள்:
G.C.E. O/L WITH CREDIT PASS IN SCIENCE AND SIMPLE PASS IN ENGLISH & MATHS (26-21-15-19)

ஜி.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு பொருத்தமானது.
☞ கற்கைநெறி அனுமதிக்கும் மேலதிக விவரங்களுக்கும் எதிர்வரும் 28.08.2003 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும். (21479)


# 30ஆம் நாள் நீங்கா நினைவில்

மண்ணில் 1943 - 09 - 04



விண்ணில் 2003 - 07 - 21

## திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்

பூவுடனம் பொட்டுடனம்
பூவுலகை விட்டேகும்
மேவியவுன் மே லெண்ணம்
மேதினியில் பொய்க்க வில்லை
ஓவியமா யா கிடினம்
உன்னன்பு உயிர் வாழும்
தேவியுந்தன் வழி காட்டல்
தெப்பமெனக் கரை சேர்க்கும்.

50, சாத்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (21545)(26-21-15-19)

துணைவர்,
பிள்ளைகள்.

உ

ஹரி ஓம் நாராயணாயநம



# அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்



## ரதோற்சவ விஞ்ஞாபனம்

மெய்யன்பர்களே!

நிகழும் சுபானு வருஷம் ஆடி மாதம் 26ஆம் திகதி திங்கட்கிழமை (11.08.2003) தொடக்கம் ஆவணி 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை (22.08.2003) வரை மஹோற்சவம் நிகழும். அன்பர்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசனை செய்து இஷ்டசித்திகள் பெறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| தேர் வீதிவலம் | 20-08-2003 புதன் | மு.ப.11.30 மணி |
| உறியடி உற்சவம் | 20-08-2003 புதன் | மாலை 7.00 மணி |
| ஸ்ரீரங்கநாதன் பாதபூஜை | 21-08-2003 வியாழன் | மு.ப.8.30 மணி |
| தீர்த்த உற்சவம் | 21-08-2003 வியாழன் | மு.ப.10.30 மணி |
| ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல் | 22-08-2003 வெள்ளி | மு.ப.8.00 மணி |
| திருக்கல்யாணம் | 22-08-2003 வெள்ளி | பி.ப.2.30 மணி |

### விழாக்கால நேர ஒழுங்குகள்

| | | | |
|---|---|---|---|
| காலைப்பூஜை | காலை 7.00 மணி | கலை நிகழ்வுகள் | பி.ப.3.30 மணி |
| அபிஷேகம் | மு.ப.8.30 மணி | தம்பபூஜை | பி.ப.5.00 மணி |
| தம்பபூஜை | மு.ப.10.30 மணி | வசந்தபூஜை | பி.ப.5.45 மணி |
| பிரார்த்தனை | மு.ப.11.15 மணி | விஷேட நிகழ்ச்சிகள் | மாலை 7.00 மணி |
| வசந்தபூஜை | மு.ப.11.45 மணி | | |

பிரதம குரு: சிவஸ்ரீ பரம சண்முகசுந்தரக்குருக்கள்
உதவியாளர் (நிரந்தர பூசகர்கள்): சிவத்திரு.கு.ஞானசுதன், சிவத்திரு.தி.வரோதயன்
மங்கள வாத்தியம்: பால.பாலமோகன் குழுவினர், அளவெட்டி.

விளம்பர அன்பளிப்பு
லிங்கன் கிறீம் ஹவுஸ்
இல.119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பொறுப்புரிமைப் பரிபாலனசபை
நாகேஸ்வரம்,
அளவெட்டி.

(29608)(21-19-15)

# வடக்கு - கிழக்கில் முஸ்லிம் பாடசாலைகள் நிர்வாகத்துக்கு முஸ்லிம் கல்விப் பிரிவு

## ஆளுநர் பணிப்புரை; அமைச்சு பூர்வாங்க ஏற்பாடுகள்

கல்முனை,ஓக.19

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் முஸ்லிம் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோக ஜயவர்த்தனவின் பணிப்புரையை அடுத்து, மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் என அறியப்படுகின்றது.

உத்தேச மாகாண முஸ்லிம் கல்விப் பிரிவு வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளை நிர்வகிக்கும்.

இங்கு 310 முஸ்லிம் பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி, இம்மாதம் 15ஆம் திகதி தொடக்கம் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட யூ.எல்.அலியார், முஸ்லிம் கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

### ராமேஸ்வரம் - தலைமன்னார் பாலம் குறித்து

# ஜெயலலிதாவுக்கு விளக்கிக் கூற பிரதமர் ரணில் சென்னை விஜயம்

கொழும்பு,ஓக.19

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் 22 ஆம் திகதி தென் இந்தியாவுக்குச் செல்லவிருக்கிறார்.

கேரளாவிலுள்ள கொச்சினுக்குச் செல்லும் பிரதமர் ரணில், 23 ஆம் திகதி சென்னைக்கு விஜயம் செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான பிரச்சினைகள் குறித்தும் தலைமன்னாருக்கும் ராமேஸ்வரத்துக்கும் இடையில் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கும் பாலம் குறித்தும் பிரதமர் பேச்சு நடத்தவிருக்கிறார்.

இப்பாலம் நிறுவப்படவிருப்பது தொடர்பாக முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே இந்திய மத்திய அரசிடம் ஆட்சேபம் தெரிவித்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

இப்பாலம் நிறுவப்பட்டால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கிடைக்கவிருக்கும் நன்மைகள் குறித்து பிரதமர் ரணில், முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் விளக்கிக் கூறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையிலுள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் மன்றக் கல்லூரியின் டாட்டா வர்சுவல் அக்கடமியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச்சி ஒன்றில பிரதமர் ரணில் முக்கிய உரையை ஆற்றவிருக்கிறார்.

### புத்தளம் அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவி

# அமைச்சர் அஸ்வர் ராஜினாமாவுக்கு மு.கா.இருவார கால அவகாசம்!

### இன்றேல் ஐ.தே. முன்னணிக்கான ஆதரவு வாபஸ்

"புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராகப் பணியாற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவியை இருவார காலத்தினுள் ராஜினாமாச் செய்யவேண்டும். தவறின் புத்தளம் மாவட்டத்தில் ஐ.தே.முன்னணிக்கு வழங்கும் ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக்கொள்ளும்!"

புத்தளம் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுக் கூட்டம், அதன் தலைவரான மு.காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் ஜே.ஏ.பாயிஸ் தலைமையில் கடந்த 16 ஆம் திகதியன்று புத்தளத்தில் நடைபெற்றபோது மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து அமைப்பாளர் பாயிஸ் 'உதயனு'க்குத் தகவல் தருகையில் கூறியதாவது:-

"மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்து அபிவிருத்தி நடவடிக்கையில் பங்குகொள்ள வேண்டிய அமைச்சர், மாறாக புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். எனவே, அவர் தமது பதவியை ராஜினாமாச் செய்யாவிட்டால் எமது ஆதரவை புத்தளம் மாவட்டத்தில் விலக்கிக் கொள்வோம்!" - என்றார். (ஒ)

# நிரந்தர பொலீஸ் சேவையில் 200 ஊர்காவற் படையினர்

### ஹக்கீம் கோரிக்கையின் பேரில் நடவடிக்கை

கொழும்பு,ஓக.19

மூதூரில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக பயிற்சி பெற்ற 200 ஊர்காவற்படையினர் நிரந்தர பொலீஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளின்பேரில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

மூதூரில் அவ்வப்போது இடம்பெறும் அசம்பாவிதங்களைக் கட்டுப்படுத்த மூதூரில் பயிற்றப்பட்ட 200 முஸ்லிம் ஊர்காவற் படையினரையும் நிரந்தர பொலீஸ் சேவையில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் கேட்டுள்ளார். (ஒ)

# வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகளுக்கு பல மடங்கு அதிகரித்த அபராதம்!

கொழும்பு,ஓக.19

வீதி ஒழுங்குகளை மீறும் சாரதிகளுக்குக் கூடுதலான அபராதப் பணம் விதிக்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் தெரிவித்திருக்கிறார். இதற்கென மோட்டார் வாகனக்கட்டளைச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது எனவும் அவர் கூறுகிறார்.

திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ் வீதிகளில் கரும்புகையைக் கக்கும் பஸ்கள் உட்பட சகல வாகனங்களுக்கும் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிககப்படும். கவனயீனமாக வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கான அபராதம் 2 ஆயிரம் ரூபாவாகும். மிகக் கூடுதலான வேகத்தில் வாகனம் செலுத்துவோருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படும்.

தற்பொழுது விதிக்கப்படும் அபராதங்களை விட இந்த அபராதங்கள் பல மடங்கு அதிகமாகும்.

இவற்றை விட, பஸ்கள் உட்பட கனரக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் வருடந்தோறும் உடல் தகுதி காண் பரிசோதனைக்கு உட்படுவதும கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. (ஒ)

# கிளிநொச்சி பாடசாலைகளுக்கு அமைச்சு 12 கோடி ரூபா உதவி

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளைப் புனரமைப்பதற்கென கல்வி அமைச்சினால் 12 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைக் கல்வி அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் அனைத்துமே போரினால் சேதமடைந்துள்ளன. இவற்றில் 10 இற்கும் அதிகமான பாடசாலைகள் முற்றிலும் பாதிப்பிற்குள்ளான நிலையில் உள்ளன.

இவற்றைத் திருத்தி அமைப்பதற்கு பல லட்சம் ரூபாய் தேவைப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் கல்வி அமைச்சிற்கு தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்தே உடனடி உதவியாக 12 கோடி ரூபாவை கல்வி அமைச்சு கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென ஒதுக்கியுள்ளது. (ஒ-12)

### சோடா என எண்ணி பெற்றோலைக் குடித்த சிறுமி ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி,ஓக.19

குளிர்பானப் போத்தலுக்குள்ளிருந்த பெற்றோலை குளிர்பானம் என்று தவறுதலாக நினைத்துக் குடித்த ஏழு வயதுச் சிறுமி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை மாசாரில் கடந்த வெள்ளி இடம்பெற்ற இச்சம்பவத்தில் உடல் பாதிக்கப்பட்டு அருட்செல்வம் சங்சிகா (வயது 7) என்ற சிறுமி பளை ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸ்மூலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.(ஒ-117)

### பதிவாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓக.19

குடாநாட்டில் 15 பதிவாளர் பகுதிகளுக்கு புதியவர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை பதிவாளர் நாயகம் கோரியுள்ளனர்.

தற்சமயம் பதில் பதிவாளர்கள் பணிபுரியும் யாழ். நகர மேற்கு, யாழ். நகர கிழக்கு, கொக்குவில் - கோண்டாவில், திருநெல்வேலி - அரியாலை, வரணி, சாவகச்சேரி, அச்சுவேலி, ஏழாலை, மயிலிட்டி, மல்லாகம், உடுவில், மானிப்பாய், சங்கானை, உடுவில் (விவாகம்), யாழ்ப்பாணம் (விவாகம்) ஆகிய இடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் யாழ் அரச அதிபருக்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை கடந்த 15 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

### நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.19

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினரால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் வி.சிவஞானசேகரத்தின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக் கலைஞர்களாக வயலின் - ஆர்.இராதாகிருஷ்ணன், மிருதங்கம் - எஸ்.துரைராசா, கெஞ்சிரா - கே.அனந்தகோபன், முகர்சிங் - வி.ரமணன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-8)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி நல்லூர் சைவ மகாசபையினரால் ஆலய மேற்கு வீதியில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய அரங்கில் நடத்தப்பட்டுவரும் தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு 'நெற்றிக்கண்' பற்றி சி.வைத்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-8)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவையால் நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தப்பட்டுவரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு 'ஈழத்தில் முருக வழிபாடு' என்னும் பொருளில் திருமதி நாச்சியார் செல்வநாயகம் சொற்பொழிவாற்றுவார். (எ-8-30)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

பதினேழாம் திருவிழா



## நல்லூரானே நலம் தாருமையா!

நல்லை பதிவாழ் முருகையா!
நாநிலத்திலும் நலம் வேண்டுமையா!
தொல்லைகள் என்று தீருமையா!
இல்லை என்று கூறாமல் தீருமையா!
வேல் தாங்கியுள்ள வேலையா!
வேண்டும் வரங்களைத் தாருமையா!
மால் மருகையா சூரசங்காரனே ஐயா!
நல்லூரானே நலம் தாருமையா...!

இ.டினேஷ் - கோண்டாவில்.

## நல்ல நிலை வேண்டுமையா!

குன்று தோறாடிவந்த குறைதீர்க்கும் குமரையா
நன்று நீ நல்லையிலே மயில் மீது அமர் காட்சி
இன்று போல் உன்எழிலை உவகையுடன் காண்பதற்க
என்றுமே அருள் செய்வாய் எழில் வள்ளி மணவாளா!
அன்று தொட்டு நாம் கண்ட அல்லல் தீர்த்தருள்வாய்
நின்றும் நடந்தும் நின்தாளே நினைந்திருந்தோம்.
தொன்று தொட்டு நீ தந்த நல்லையின் அருளாட்சி
பொன்றும் நிலை போக்கிக் காத்தருள வேண்டுமய்யா
கொன்றும் குவித்தும் குதறும் நிலை இனி வேண்டாம்
கன்று தன்தாயைப் பிரியும் நிலை இனி வேண்டாம்
மன்றும் மாடமும் பேய் கொள்ளும் நிலை வேண்டாம் இவை
வென்று பெற்றிட நீ நல்ல வரம் தரவேண்டும் புவி
சான்று பகர்ந்திடும் நற்சமாதான நிலை வேண்டும்.

- பத்மகிரி - புலோலி.

## ஆசையோ தீரவில்லையே!

இராகம்:- ரேவதி தாளம்:-ஆதி

பல்லவி

என்னதான் இருந்தாலும் உன்னை மறந்திட
என்னால் முடியவில்லையே - முருகா

அநுபல்லவி

முன்னை நான் பலமுறை உன்னிடம் வந்த போதும்
இன்னமும் ஆசையோ தீரவில்லையே - முருகா

சரணம்

சின்னதாய் வீடொன்று இருக்கவே கேட்டிட
பென்னம் பெரியதாய் தந்துவிட்டாய் முருகா!
அன்னமும் ஆயுளும் தந்துவிட்டால் என்றும்
உன்னையே பாடியிங்கு உள்ளவரை வாழவைப்பேன்!

- கே.எஸ்.சிவஞானராஜா.

## வடிவேலா வழுத்துகிறோம்

செப்பும் மொழி களிலே
செந்தமிழின் இனி மையையே
தப்பாது எமக் கீயும்
தந்து வத்தின் சத்தியனே!
முப்புரத்தை எரித் திட்ட
முழுமுதலான் முகிழ்திடு நல்
வைப்பாக வந் துதித்த
வடிவேலா வழுத் துகிறோம்.

- கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## வேல்கொண்டு வினை தீர்ப்பாய்!

பல்லவி

நல்லையிலே உறையும் எங்கள் நாயகா - உனை
நம்பினோர்க்கு நலமளிக்கும் வேலவா

அனுபல்லவி

தாயகத்து பரணிதனை போக்கையா-தமிழன்
தலை நிமிர்ந்து வாழ வழி காட்டையா

சரணங்கள்

மாம்பழத்தை வேண்டிநிற்க மயிலேறினாய் - புகழ்
அருணகிரி பாடிநிற்க வழிகாட்டினாய்
கந்த சஷ்டியிலே வருமடியார் குறை போக்கினாய் - நாளும்
ஞானசக்தி வேல் கொண்டு வினை நீக்குவாய்.

சங்கிலியன் உந்தன் மண்ணில் அர(சா)ற்றினான் - தமிழ்
மானம் காக்கும் மறவர் குழாம் படை நடத்தினர்
வீரம் கொண்டநம் இனத்திற்கு விடிவு வேண்டும் - எம்
ஆறுபடை வீடு கொண்ட அழகுசுந்தரா.

- நயினை தருமபாலன்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

6 மாதம் நிரம்பிய அல்சேஷன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தவராசா, துர்க்கை அம்மன் கோயிலடி, மட்டுவில், சாவகச்சேரி. (21548)

### வீடு விற்பனைக்கு

சக்கோட்டையில் றோட்டுக்கரையில் சகல வசதிகளுடன் கூடிய (கிணறு, மின்சார வசதி) பெரிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜோசப், கடற்கரை வீதி, பருத்தித்துறை. T.P.077 6041215 (21507)

பருத்தித்துறை தம்பசிட்டி அ.மி. பாடசாலைக்கு அண்மையில் நன்னீர், மின்சார வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: த.தர்மபாலசிங்கம், திருஞானசம்பந்த வீதி, இத்தியடி, வைரவர் கோயில் முன்பாக வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை. (21557)

### காணி விற்பனைக்கு

நாவற்குழி பிள்ளையார் கோவிலடியில் வீட்டுடன் 3 பரப்புக் காணி சகல பயன்தரும் மரங்களுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0777-293160, நிரஞ்சன். (21568)

### வீடு வாடகைக்கு தேவை

அரச தொழில்பார்க்கும் பெற்றோரும், பிள்ளைகள், வேலையாள் உட்பட ஆறுபேர் கொண்ட குடும்பத்திற்கு யாழ்.நகர் நல்லூரை அண்டிய பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பரஇல. 1900 மே/பா உதயன்.(21566)

### மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, பிரான்ஸில் வதியும், ஸ்பொனசரில அழைக்கும் தகைமையுடைய 46வயது 5'6"உயரம், பூசம் முதலாம பாதம் மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். குடும்ப விரைத்துடன் தொடர்பு கொளளவும். தரகர் தேவையில்லை. திருமதி ம.பாலசுப்பிரமணியம் இல.79, சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (21571)

### தேவை

*மிக்சர் தயாரிப்பில் அனுபவமுள்ள பெண்பிள்ளை தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.*

**ஸ்ரீ இராமராஜ் அன் சன்ஸ்**
603,கே.கே.எஸ்.வீதி,
(12) யாழ்ப்பாணம். (21575)

### தேவை

எமது நிறுவனத்துக்கு விற்பனையாளர், சிட்டை எழுதுபவர், கணக்காளர், வேலை பழக விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும்.
தொடர்பு:
*பேப்பர் ஹவுஸ்,*
300,ஆஸ்பத்திரி வீதி,
(12) யாழ்ப்பாணம்.(21572)

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்ய அல்லது நாளாந்தம் போய் வந்து வேலை செய்யக்கூடிய பணிப் பெண் தேவை.
தொடர்பு:
(26) 071-2347564 (21570)

### ஓவியர் பயிற்சி

6 மாதங்கள்
அங்கீகரிக்கப்பட்ட
சான்றிதழுடன்
IAT
சித்திரப்பயிற்சி நிறுவனம்
ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம். (21574) (26)


# காரைநகரில் தொடரும் மர்மப்பொருள் வெடிப்புகளும், வீண் உயிரிழப்புகளும்

**செய்திக் கட்டுரை**
**காரைநகர் செய்தியாளர்**

காரைநகரில் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் சர்வசாதாரணமாக மாறி வருகின்றன. கடந்த ஒரு மாதகாலத்திற்குள் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு சிறுவன் உட்பட இருவர் பலியானதுடன, ஐந்து சிறுவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

காரைநகரின் கரையோரப்பகுதிகளான நீலங்காடு, ஊரி ஆகிய கிராமங்களில் காணப்பட்ட மர்மப் பொருள்களை எடுத்து கையாள முற்பட்ட போதே இந்த குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

காரைநகரின் கரையோரப் பகுதிகளில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள என்பன அகற்றப்பட்ட இடங்களிலேயே மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டனர். எனினும், இவ்வாறு வெடி பொருள்கள் இங்கு காணப்படுவது இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும், சந்தேகத்தையுமே தோற்றுவித்துள்ளது.

இப்பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மிகமிக வறியவர்களாகவும் அடிப்படை வசதிகளற்றவாகளாகவுமே உள்ளனர். இவர்களில் பெருமபாலானவர்கள் கடற்றொழிலையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக பிட்டிஎல்லை, கொட்டைப்புலம், ஊரி, நிலங்காடு உள்ளிட்ட கரையோரக் கிராமங்களில் உள்ள பெருமளவு சிறுவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை.

இவர்கள் குடும்ப வறுமை காரணமாக கூலி வேலைகளுக்குச் செல்பவர்களாகவும், சிலர் பெற்றோரின் கவனிப்பு இன்றி வீணே பொழுதைக் கழிப்பவர்களாகவும் உள்ளனர். இதனால், கல்வியறிவு மட்டுமன்றி வெடிகுண்டுகளினால் ஏற்படும் விபரீதங்களும் தெரியாமல் இருப்பது ஆச்சரியமல்ல. இவர்கள் வெடிபொருள்களை விளையாட்டுப் பொருள்களாக நினைத்து அவற்றினை எடுத்து விளையாடுவதாகக் கூறப்படுகின்றது. இதன் விளைவே சிறுவர் பலியாவதற்கும் ஐந்து சிறுவர்கள் படுகாயமடைவதற்கும் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இங்குள்ள சிறார்களுக்கு பாடசாலைக்குச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வெடிபொருள்களால ஏற்படும் விளைவுகளையும் எடுத்துரைபபது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரினதும் பொறுப்பு வாய்ந்த கடமையாகும்.இதிலிருந்து எவரும் விலகிச் செல்லமுடியாது. இக்கிராமங்கள் மீது சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர், சிறுவர் நன்நடத்தைப் பிரிவு உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் ஆர்வலர்கள் உட்படப் பலரும் கவனம் செலுத்த வேண்டும் என்பது இப்பகுதி வாழ் மக்களின் கோரிக்கையாகவுள்ளது.

மேலும், கரையோரப் பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் அடிப்படை வசதிகளற்ற நிலைமையிலும், தொழில்வாய்ப்பு மிகக் குறைந்த நிலையிலுமே காணப்படுகின்றனர்.

குறிப்பாக தோப்புக்காடு பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள குடும்பங்கள், குடிதண்ணீர் வசதி இன்றி அவதிப்படுகின்றனர். இங்குள்ள கிணறுகள் அனைத்தும் முற்றாக வற்றிவிட்டதனால் நீண்டதூரம் சென்றே வீட்டுப்பாவனை மற்றும் குடிப்பதற்கான நீரைப்பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. சில குடும்பங்கள் கடல்நீரையே பாத்திரங்கள் கழுவுவதற்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துவதையும் காண முடிகின்றது.

இப்பகுதியில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. கடந்த காலங்களில் குழாய் நீர் விநியோகத்திட்டம் மூலம் இப்பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. அவை தற்போது சேதமடைந்திருப்பதால் அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தற்போது ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் ஒருவருக்கு 5 லீற்றர் வீதம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. அதுவும் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என்றும் - அதனைத தினமும் வழங்க ஊர்காவற்றுறை பிரதேச சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

தோப்புக்காடு கிராமத்துக்குச் செலலும் பிரதான வீதி கடற்படையினரால போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால், இங்குள்ள மக்கள் குடி தண்ணீரைப் பெறுவதற்கும ஏனைய தேவைகளுக்கும் கால்நடையாகப் பல கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. இப்பாதையை மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுமாறு உரிய அதிகாரிகளிடம் இப்பகுதி மக்கள் பல தடவை கோரிக்கை விடுத்தும், இதுவரை பயன் ஏதும் ஏற்படவில்லை என்றும் - மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இங்குள்ளவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவதற்கு குறிப்பிட்ட பிரதேசத்தையே கடற்படையினர் அனுமதிக்கின்றனர். இதனால் போதியளவு மீனகளைப் பிடிக்கமுடியாது உள்ளதாக மீனவர் தரப்பில் கூறப்பட்டது. அத்துடன பாஸ் நடைமுறையில்கூட எதுவித தளர்வும் ஏற்படவில்லை எனவும் மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிறந்த மீன்பிடித் துறைகளைக் கொண்டுள்ள இப்பகுதிகளில் பிடிக்கப்படும் மீன் இடப்பெயர்வுக்கு முன்னர் இந்த ஊர் மக்களின் உணவுத் தேவையை பூர்த்திசெய்தது மட்டுமன்றி கொழும்பு போன்ற தென்னிலங்கைப் பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டும் வந்தது. நோர்வே நாட்டு அரசாங்கம் இலங்கை அரசுடன் இணைந்து சீநோர் நிறுவனத்தை இப்பகுதியில் நிறுவியது. இங்கு சர்வதேச தரத்திலான கண்ணாடி இழைப் படகுகள் உற்பத்தி செய்தல், கடலுணவு பதனிடல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. வடபகுதியைச் சேர்ந்த நூற்றுக கணக்கான மக்கள் வேலை வாய்ப்பை பெற்றும் இருந்தனர். தற்போது இந்த நிறுவனம் மூடப்பட்டுள்ளது. இத்னை மீள இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்டகால கோரிக்கையாகும்.

இவ்வாறே காரைநகரின் ஏனைய கரையோரக் கிராமங்களில் உள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இன்றியும், தொழில் வாய்ப்பு, குடிதண்ணீர், மின்சாரம், கல்வி போன்ற அடிப்படை வசதிகள் இன்றியும் அவதிப்படுகின்றனர். இவற்றுக்கான தீர்வு எப்போது வரும் என்பதே அவர்களது ஆவலாக உள்ளது. *

## பண்டத்தரிப்பு நகரப் பகுதியில்

# காலாவதியான 'பிஸ்கட்' விற்ற வர்த்தகர்கள் மீது வழக்கு தாக்கு

காலாவதியான பிஸ்கட்டுகளை கடையில் விற்பனைக்கு வைத்திருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த இரு கடைகளின் உரிமையாளர்கள் மீது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பண்டத்தரிப்பு பட்டின பகுதியிலுள்ள கடைகளில் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினர் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

மேற்படி இரு கடைகளிலும் காலாவதியான பிஸ்கட் பக்கற்றுகளும், சிறுவர்களுக்கான "டிப்பி டிப்பி" எனப்படும் சிறிய ரக பிஸ்கற் பைக்கற்றுகளும விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு கைபபற்றப்பட்டது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தலைமை பொது சுகாதார பரிசோதகர் எஸ்.வருணநாதன், சங்கானை பொது சுகாதார பரிசோதகரும், பண்டத்தரிப்பு பதில் பொது சுகாதார பரிசோதகருமான பொ.சிவரூபன், சுழிபுரம் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.ரதீஸ் ஆகியோர் இத் திடீர்ப் பரிசோதனையை மேற்கொணடனர். (எ-135)

# மின்னியல் பொருள்களை கடத்த முயன்ற 9 பேர் சிக்கினர்

கொழும்பு,ஓக.19

10 லட்சம் ரூபா பெறுமதியான மின்னியல் உபகரணங்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட சீனாவைச் சேர்ந்த 9 பேரை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளியன்று அதிகாலை கதே பசுபிக் சி.எம்.-703 விமானம் மூலம் இலங்கை வந்த இவர்கள், அன்றைய தினமே இங்கிருந்து மின்னியல் பொருள்களைக் கடத்திச் செல்ல முற்பட்டனர்.

அவ்வேளை சுங்க அதிகாரிகள் அவர்களை மடக்கிப்பிடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம-12)

# காரைநகரில் மிதிவெடிகள் மீட்பு

காரைநகர்,ஓக.19

காரைநகர் கலாநிதி ஆதியாகராசா மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வளவில் இருந்து கடற படையினரால் இரு மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கு அருகிலுள்ள வளவில் மிதிவெடி இருப்பது தொடாபாக காரை வடகிழக்கு கிராம சேவையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இதுதொடர்பாக அருகில் உள்ள கடற்படையினருக்கு கிராம சேவையாளர் தெரியுப்படுத்தியதையடுத்து கடற்படையினர் கடந்த வியாழன் இரு மிதிவெடிகளை மீட்டுள்ளனர்.

இப்பகுதியில் மேலும் பல மிதிவெடிகள் இருக்கலாம் எனவும் கூறபபட்டது. (எ-73)


## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் 4 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(மு.ப. 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை)
தொடர்பு:
திரு.இ.ஜெயக்குமார்,
(12-17-21) இல.85, கண்டி வீதி, சாவகச்சேரி. (21581)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



காரைநகரிலும், மூளாயிலும
நற்பணியாற்றும் பரம்பரை வைத்தியர்
வைத்திய கலாநிதி
*திருமதி தவமணிதேவி கிருஸ்ணமூர்த்தி*
அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளமையையிட்டு நாம் மனமகிழ்வுறுவதுடன், அவரது பணி மேலும் சிறக்க அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மூளாய். - மூளாய் மக்கள்.
(சி-29614) (21-19-12-17)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் உப அதிபர்
திருமதி சத்தியதேவி சிவஞானம அவர்களின் அருமைத் தந்தையார்
**சின்னத்தம்பி சுப்பிரமணியம்**
அவர்கள் 20.07.2003 அன்று இறைபதம் எய்தியமையால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், முன்னாள் அதிபர்,
ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்
(பாடசாலைச் சமூகம்). (25-12-17-21)
யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம், ஏழாலை. (21573)

## திருமண வெள்ளிவிழா



இளவாலை புனித அன்னம்மாள் பங்கைச்
சேர்ந்தவர்களும் ஜேர்மனியில் வசிப்பவர்களுமான
**திரு. திருமதி அந்தோனிப்பிள்ளை**
தம்பதிகள்
தமது திருமண ஜூபிலியை
இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை மகிழ்ச்சியுடன்
கொண்டாடுகின்றனர்.
திருமண அருட்சாதனத்தைப் பெற்று 25 ஆண்டுகள்
நிறைவு காணும் இவர்களை
இவர்களது அன்புச் செல்வங்கள்
அஜந்தன், அனுஷா, அலெக்ஸ், அன்ரனி
மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் திருமண வாழ்வில் திருவும், அருளும் பெற்று நீண்ட இன்பம் காண வாழ்த்துகின்றனர்.

*தகவல்:*
மரியாம்பிள்ளை,
B25/1/4, SOYSAPURA FLATS,
SOYSAPURA. (T/20500) (25-12-17-21)

S.ANTHONIPILLAI,
MARIEN STR 6
48607 OCMTRUP,
GERMANY.

# கறி வேப்பிலையின் சுவையும் மருத்துவ குணமும்

## கமமும் புலமும்

தயாரிப்பு: ஜெயஸ்ரீ

கறி வேப்பிலை ஒரு குறுமரம். ஆனால், பயன்தரும் இதன் இலைகள் பறிக்கப்பட்டு வருவதால் அதிக உயரமாக வளர விடுவதில்லை. கறி வேப்பிலை மரத்தின் பூர்வீகம் இந்தியா. அந்தமான் தீவு உட்பட நமது நாட்டிலும் கறி வேப்பிலை வளருகிறது. கடல் மட்டத்திலிருந்து 1,500 மீட்டர் உயரம் உள்ள பகுதிகள் வரை வளருகிறது.

கறி வேப்பிலை பயிரிட வடிகால் செதியுள்ள செம்மண் மிகவும் உகந்தது. குழிகள் தோண்டி அதில் மணல் கலந்த செம்மண் நிரப்பி கன்றுகளை நட்டு வளர்க்கலாம். கனிகளிலிருந்து சேகரித்த விதைகளை உடன் விதைத்துவிட வேண்டும் தாமதமானால் முளைப்புச் சக்தியை இழந்துவிடும்.

கறி வேப்பிலை இலை ஒற்றைக் கூட்டிலையாகும். ஒரே நரம்பில் பல இலைகள் இணைந்திருக்கும். 30 சென்ரி மீட்டர் நீளமுடையது. அதில் 11 முதல் 25 சிற்றிலைகள் இருக்கும். கிளைகளில் இலை கொத்துக் கொத்தாக இருக்கும். கறி வேப்பிலை இருண்ட பச்சை நிறமாக இருக்கும். சிற்றிலைகள் கண் வடிவத்தில் இருக்கும்.

கறிவேப்பிலைக்குத் தனிப்பட்ட ஒரு நல்ல மணமிருப்பதால் இதை சமையல் வகைக்கு அதிகளவில் மணமூட்டப் பயன்படுத்துகிறார்கள். மணம் தவிர, அதிகளவில் விட்டமின் 'ஏ', கல்ஸியம் இருக்கிறது. உலோக உப்புக்கள் அதிகம் இருக்கின்றன.

கறி வேப்பிலைத் துவையல், கறி வேப்பிலைப் பொடி தயார் செய்து உணவுடன் உட்கொள்ளலாம். பசியைத் தூண்டி, உண்ணும் ஆவலை வளர்க்கும்.

கறி வேப்பிலை ஒரு கைப்பிடி அளவு, கசகசா 15 கிராம், கஸ்தூரி மஞ்சள் 8 கிராம் இவைகளைச் சேர்த்து நன்கு மைபோல் அரைத்து கனமாக



அம்மை வடுக்கள் உள்ள முகத்தில் பூசி ஊறவைக்க வேண்டும். பிறகு வெந்நீர் கொண்டு கழுவவேண்டும். காலை, மாலை இந்தவிதமாகச் செய்துவர படிப்படியாக அம்மை வடுக்கள் மறைந்துவிடும்.

கறி வேப்பிலையை நன்கு அரைத்து கொட்டைப் பாக்களவு எடுத்து, அரை டம்ளர் எருமைத் தயிருடன் கலந்து காலை வேளையில் மட்டும் கொடுத்து வந்தால் வாந்தி பேதி படிப்படியாகக் குறையும்.

கறி வேப்பிலை, மிளகு ஆகியவற்றை நெய்யில் வறுத்து, வெந்நீர் விட்டு அரைத்துக் கரைத்துக் குழந்தைகளுக்கு நீராட்டிய பின் கொடுத்தால் மந்தம் நீங்கிவிடும்; பசி ஏற்படும்.

கறி வேப்பிலைச்சாறு, நம் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களின், கிருமிகளைத் தாக்கும் திறன் அதிகரிக்க உதவுகிறது.

கறிவேப்பிலையில் எண்ணெய் ஒன்று உள்ளது. இதை நீராவி கொண்டு கவனமாக பிரித்தெடுக்க வேண்டும். சோப்புகளில் மணமூட்டப் பயன்படுத்தலாம்.

கறி வேப்பிலை ஈக்கு வாந்தியை நிறுத்தும் குணம் உள்ளது.

கறி வேப்பிலையை எடுத்துப் பால்விட்டு அரைத்துச் சாறு பிழிந்து எடுக்கவும்.

கறி வேப்பிலைப் பூக்கள் கிளைகளின் நுனியில் சம தள மஞ்சரிகளாக உருவாகும் வெண்மை நிறமுடையவை; இனிய மணமுள்ளவை.

### *கறி வேப்பிலைக் காய்கனி*

கறி வேப்பிலைக் காய்கள் உருண்டை வடிவில் உருவாகும். ஆரம்பத்தில் பச்சை நிறமாக இருக்கும் பின்னர் சிவப்பு நிறம் பெறும்.

முடிவில் கனியாகும் பொழுது கருமை நிறம் பெறும். கனியில் குழ குழப்பான சதையும் அதனுள் ஒரு விதையும் இருக்கும்.

கனியை உண்ணலாம். இதில் மஞ்சள் நிற எண்ணெய் எடுக்கலாம். அது ஒருவித மணமும் கிராம்பு போன்ற சுவையும் இருக்கும். நாக்கில் படும்பொழுது குளிர்ச்சியாக இருக்கும்.

### *கறி வேப்பிலை பட்டை வேர்*

கறி வேப்பிலைப் பட்டை மென்மையாகவும், கருப்பாகவும் இருக்கும்.

கறி வேப்பிலை இலை, வேர், பட்டை ஆகியவற்றை வெந்நீரில் வேகவைத்து அந்த நீரைக் குடித்தால் சுவையின்மை, சீதபேதியால் வரும் வயிற்றுளைவு, பழஞ்சுரம், பைத்தியம் ஆகியவை நீங்கும்.

பட்டை, வேருக்கு வெப்பம் உண்டாகும் குணம் உள்ளது, விஷக்கடிகளுக்கும், சிராய்ப்புகளுக்கும், இவற்றை அரைத்துப் பூசலாம்.

### *கறி வேப்பிலை மரம்*

கறிவேப்பிலை மரம் சாம்பல் வெள்ளை நிறமுடையது. நெருங்கிய ரேகைகள் உடையது கடினமானது. நன்கு உழைக்கக் கூடியது. ஒரு கன மீட்டர் மரத்தின் எடை 686 கிலோ. வேளாண்மைக் கருவிகள் செய்திட உபயோகிக்கலாம்.✦

# பண்டைக்கால விவசாயிகள்

நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள நமது விவசாயப் பெருமக்கள் சந்து குத்தி மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளினால் ஏற்படும் நஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆரம்பத்திலிருந்து நெல் மணிகள் செந்நிறம் பெறும் தருணம் வரையிலும் இச்சந்துகுத்தி மற்றும் நெல்மணிகளின் சாற்றினை உறிஞ்சும் நெற் பூச்சிகளினால் ஏற்படும் பாதிப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். கூட்டமாக வரும் இவை, நான்கு அல்லது ஐந்து நாள்களில் மிகக் குறைந்த காலவரையறைக்குள் பரவி பால் கட்டும் பருவத்திலுள்ள நெல் மணிகளின் சாற்றினை உறிஞ்சிக் குடித்தலின்மூலம் நெல்மணிகள் (சப்பிகளாக) பக்களாக மாற்றமடைகின்றன.

நெற்பயிர் இப்பருவம் எய்தும் வேளையில் விவசாயி வயலின் பராமரிப்புகளுக்கான சகல செலவினங்களையும் செலவுசெய்து முடித்துள்ளமையினால், அப்பருவத்திலேற்படுத்தப்படும் இப்பூச்சிகளின் பாதிப்பானது விவசாயிக்கு பாரிய நஷ்டத்தையே ஏற்படுத்துகிறது.

இந்நெல்லும், பூச்சியினால் உறிஞ்சப்பெற்ற சகல நெல்மணிகளும் சப்பிகளாக (பதர்களாக) மாறுகின்றன. ஒரு வயலில் இருந்து ஒரு சாக்கு சப்பியான நெல்மணிகள் அகற்றப் படும் வேளையில், அது ஆறு முதல்

# பயன்படுத்திய பூச்சி கொல்லிகள்

ஆறரை சாக்குகள் கொண்ட நெல் மணிகளுக்கு சமமானவையாகின்றன.

இரசாயனப் பூச்சிகொல்லிகளைப் பாவித்து நவீன விஞ்ஞான முறையின்படி நெற்செய்கையிலீடுபடும் இன்றைய விவசாயிகள், நெல்மணிகள் சப்பியாவதைத் தடுக்கும் முனைப்பின்போது அதற்கான கிருமிநாசினி வகைகளுக்கு மிகக் கூடுதலான பணத்தைச் செலவிடுகின்றனர். ஆயினும், இதன்மூலம் நூற்றுக்குநூறு வீதமான பலன்கிடைக்கவில்லை என்பது அறுவடையின் பின்னரான நெல் தூற்றப்படும் வேளையில் குவியும் சப்பியான நெல்மணிகளைப் பார்க்கும் போது தான் உணரப்படுகிறது.

இலங்கையின் முன்னைய விவசாயிகள் எதுவிதமான செலவுமின்றி இயற்கை வளங்களைப் பயனபடுத்தியே இப்பூச்சிகளின் தாக்கங்கங்களிலிருந்து நெற்கதிர்களை நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாத்து நிறைந்த விளைச்சலைப் பெற்றுள்ளனர். இன்றும் இயற்கை தந்துள்ள அப்பொக்கிஷம் எமது நாட்டிலுள்ள போதிலும் நவீன விவசாயிகள் அம்முறைகளைப் பயன்படுத்துவதில்லை. அதனால், இன்றைய விவசாயி கூடுதலான பணத்தைச் செலவு செய்தும் ஏக்கருக்கு ஏழு அல்லது எட்டு சாக்குகள் கொண்ட நெல்லைப்பெறும் வேளையில் சுமார் இரண்டு சாக்குகள் கொண்ட சப்பி நெற்குவியலையும் பெற்று இம்முறை அதிகம் சப்பியாகிவிட்டது என்று கூறிக்கொண்டு சிறு இலாபத்துடன் வீடு திரும்புவதே வழக்கமாகியுள்ளது.

மடு எனப்படும் ஒருவகை மரம் நாடுமுழுவதும் அநேகமாகக் காணப்படும் ஒன்றாகும். யாழ். குடாநாட்டிலும் அம்மரமானது காணப்படும்போதிலும் வன்னிப் பிராந்தியத்தில் அநே



கமாகக் காணப்படுகிறது. தென்னை மரத்தில் காணப்பெறும் வரைகளைப் போன்று மிகநெருக்கமான வரைகள் கொண்டுள்ளதும் ஓரளவு சாம்பல்வண்ணம் கொண்டதுமான ஓரளவு வளர்ந்த தென்னைமரத்தின் பிரமாணம் கொண்ட, அதாவது நான்கு முதல் ஐந்து அடி உயரம் கொண்டதாக இருக்கும். அதன் இலைகள், நகரப்புற இல்லங்களில் அழகுக்காக வளர்க்கப்பெறும் "பாம்" மரங்களின் இலைகளை ஒத்தவைகளான ஈச்சம் இலைகள் அமைந்திருப்பதைப் போன்று அமைந்திருக்கும்.

இம்மரங்கள் அநேகமாகப் பெரும் போகக் காலத்தை அண்டியே பூக்கின்றன. பண்டைய விவசாயிகள் இம் மரத்தின் பூக்களைப் பயன்படுத்திக் கொண்டதன் மூலமாகவே இப்பூச்சித் தொல்லையிலிருந்து முற்றிலுமாக நெற்பயிரைப் பாதுகாத்துக் கொண்டுள்ளனர்.

இப்பூக்கள் கமுகம்பூக்களைப் போன்று கொத்தாகப் பூத்திருக்கும். இப்பூக்களைப் பல பகுதிகளாக, நீளமாக வெட்டிக்கொள்ள வேண்டும். பின்னர் அவற்றின் ஒவ்வொரு துண்டுகளையும் ஆரம்பப்பருவம் தொடக்கம் பூக்கும் நிலைக்கு உள்ளிடும் நெற்பயிரின் உயரத்திற்கு அமைவாக அப்பூக்களின் துண்டங்களைத் தடிகளில் கட்டி ஆங்காங்கே வயலின் பலபாகங்களிலும் அத்தடிகளை நிலத்தில் குத்தி வைக்கவேண்டும். இதன்பின்னர் சாறு உறிஞ்சும் அப்பூச்சிகளின் தொல்லை முற்றிலும் நீங்கிவிடுவதை அவதானிக்கமுடியும். காரணம் அம்மடுப்பூக்களில் இருந்து எழும் ஒருவகை வாசனையானது அப்பூச்சிகளுக்கு நச்சுப்புகைக்கு ஒப்பானதாக இருப்பதேயாகும். எனவே, எமது நாட்டு விவசாயப் பெருமக்களும் இம்முனைப்பினை மேற்கொள்வதன் மூலம் பயனடையலாமல்லவா? ☆

## வேளை வந்துவிட்டது; தீவிரமாகச் செயற்படாவிட்டால்

# இலங்கையில் புதிதாகத் தேசம் ஒன்று உருவாவதை இந்தியா காண நேரிடும்

## அந்நாட்டுத் தலைவர்களிடம் கதிர்காமர் எச்சரிக்கை

கொழும்பு,ஓக.19

இலங்கை இனப்பிரச்சினைக்கு சட்டரீதியாக எத்தகைய தீர்வைக் காணமுடியும் என்பது குறித்து இந்தியா தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது. இதில் இந்தியா சரியாகச் செயற்படத் தவறுமானால் இலங்கையில் புதிய நாடு ஒன்று உருவாகுவதை இந்தியா பார்க்க நேரிடும்.

- இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் இலங்கை ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமர்.

இந்தியாவுக்கு விஜயஞ்செய்து அங்கு ஒருவார காலம் தங்கியுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த சனியன்று புதுடில்லியில் செய்தியாளர்கள் மத்தியல் பேசும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் யுத்தநிறுத்த காலத்திலும் எழுந்துள்ள அச்சநிலைமை தொடர்பாக இந்திய உயர் பீடத்துக்குத் தெளிவுபடுத்தவே தான் இந்தியா வந்திருக்கின்றார் எனத் தெரிவித்த லக்ஷ்மன் கதிர்காமர் செய்தியாளர்கள் மத்தியில் மேலும் குறிப்பிட்டதாவது?

கடந்த ஒன்றரை வருட யுத்த நிறுத்த காலத்தில் இலங்கையில் அமைதி நிலவிவிட்டது எனக் கருத முடியாது. இந்தக் காலப்பகுதியினுள் புலிகள் தமது பலத்தை பலமடங்கு அதிகரித்துள்ளனர். குறிப்பாக திருகோணமலை துறைமுகத்தை சுற்றி புலிகள் பலமுகாம்களை அமைத்துள்ளனர். திருகோணமலைக் கடற்பரப்பில் கடற்புலிகள் தற்கொலைப் படையணிகளின் நடமாட்டம் கடந்த ஒரு வருட காலப்பகுதியில் அதிகரித்துள்ளது.

திருமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவின் 'இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனம்' பெற்றுள்ள நிலையில் இந்த அச்ச சூழ்நிலையை இந்தியா வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. இதற்காக இந்தியா நேரடியாக இலங்கைக்கு வந்து புலிகளை எச்சரிக்கவேண்டும் என நான் எதிர்பார்க்கவில்லை. இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு சட்ட ரீதியான தீர்வு குறித்து இந்தியா ஒரு செயல்திட்டத்தை வகுக்கவேண்டிய நேரம் வந்துவிட்டது.

புலிகள் இந்தியாவைப் பற்றி பெரிதும் கவலைப்படுகிறார்கள்; பயப்படுகிறார்கள். அது வெளிப்படையான உண்மை. ராஜீவ் காந்தி விவகாரம் குறித்து அவர்கள் பெரிதும் வருந்துகிறார்கள். இதற்குக் காரணம் இருக்கிறது. இலங்கையில் நாளை யுத்தம் ஒன்று வந்தால் அமெரிக்கா அதில் தலையிடாது. ஆனால், இந்தியாவால் அப்படி இருக்கமுடியாது எனப் பிரபாகரனுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் கடந்தகாலத் தவறுகளில் இருந்து விடுபட வேண்டும் என புலிகள் விரும்புகிறார்கள்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தர்.

இந்தியாவின் பல முக்கிய அமைச்சர்களையும் சந்தித்த கதிர்காமர், செய்தியாளர் சந்திப்பின்போது திருகோணமலை துறைமுகத்தின் வரைபடத்தை வைத்து அதனைச் சூழ உள்ள அபாயங்கள் குறித்து சுமார் மூன்று மணித்தியாலங்கள் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

இலங்கையில் எழுந்துள்ள அச்ச சூழ்நிலை குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துக்கூறவே இங்கு தாம் வந்திருப்பதாக அழுத்திக்



கூறிய கதிர்காமர், இதில் இந்தியா தலையிட வேண்டும் எனத்தாம் இந்தியத் தலைவர்களிடம் வலியுறுத்தினார் எனவும் தெரிவித்தார்.

## விசர்நாய் கடித்த சிறுவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம்,ஓக.19

சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் விசர் நாய்க்கடிக்கு இலக்கானபோது தடுப்பு மருந்தேற்றத் தவறிய சிறுவன் பரிதாபகரமாக உயிர் இழக்க நேரிட்டது. பாரதிபுரம் திருநெல்வேலியினைச் சேர்ந்த எஸ்.கமலதீபன் (வயது 15) என்பவரே உயிரிழந்தவராவார்.

6 மாதங்களுக்கு முன்னர் இவர் விசர் நாய்க்கடிக்கு இலக்கானபோது தடுப்பு மருந்தேற்றத் தவறிவிட்டதாகவும் - இந்நிலையில் திடீரென வலிப்பு ஏற்பட்டதால் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மருத்துவமனையில் இவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி வியாழக்கிழமை உயிரிழந்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-139)



**சர்வதேச கெயர் நிறுவனம் பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் வயல் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி மிளகாய் செய்கையின் வயல் விழா அண்மையில் நடைபெற்றபோது கெயர் நிறுவன அலுவலர் எஸ்.சுப்பிரமணியமும் ஏனைய அலுவலர்களும் மிளகாய்ச் செய்கையைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம். (எ-135)**

# றாகம ரயில் கடவை விபத்தில் இருவர் பலி; ஒருவர் படுகாயம்!

றாகம ரயில் குறுக்கு வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலுடன் றாகம - மாபோல வீதியில் உள்ள ரயில் கடவையில் வான் ஒன்று விபத்துக்கு உள்ளானதில் இவர்கள் உயிரிழந்தனர்.

றாகம வீதியின் பாதுகாப்புக் கடமை மூடப்பட்டிருந்தபோதும் வான கடவைக்குக் குறுக்காகச் செல்ல முற்பட்டதாலேயே இந்த விபத்து ஏற்பட்டது என றாகம பொலீஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்றவேளை வானில் மூவர் பயணம் செய்தனர். இவர்களில் இருவர் உயிரிழந்தனர். மற்றையவர் பலத்த காயத்துடன் - ஆபத்தான நிலையில் - வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். வான் முற்றாக நசுங்கிச் சேதமாகியுள்ளது.

# வடக்கு-கிழக்கு மாவட்டங்களில் நவீன விளையாட்டு மைதானங்கள்

காரைதீவு,ஓக.19

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் நவீன விளையாட்டு மைதானத்துடன் கூடிய அரங்குகள் அமைக்க இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி ஒரு மாவட்டத்தில் ஒரு விளையாட்டு மைதானம் தேர்ந்தெடுக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. அங்கு விளையாட்டுக்குரிய சகல வசதிகளும் செய்யப்படும். நவீன உபகரணங்களடங்கிய விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

விளையாட்டுத்துறை அமைச்சின் உயரதிகாரியொருவர் மேற்படித் தகவலைத் தெரிவித்தார்.

இதேவேளை,

வடக்கு-கிழக்கு மாகாணசபை 25 லட்சம் ரூபாவை மாகாண விளையாட்டுத்திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவில் ஜிம்னாஸ்ரிக் கூடம் அமைக்க இந்நிதிப் பயன்படுத்தப்படவிருக்கிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்ய 5 லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தொலைபேசி மூலம் பெண்ணுடன் தொடர்பு! டேமியன் மார்ட்டின் திருமணத்தை இழந்தார்!!

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான டேமியன் மார்ட்டினின் செலூலர் தொலைபேசியில் வேறொரு பெண்ணின் எஸ்.எம்.எஸ். தகவல் வந்ததைக் கண்ணுற்ற டேமியன் மார்ட்டினின் காதலி, திருமணத்தை ரத்துச் செய்துவிட்டார் என ஆஸ்திரேலிய பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

செலூலர் தொலைபேசியில் தென்னாபிரிக்க பெண்ணொருவருக்கு ஆபாச அழைப்பு விடுத்தார் என்று ஆஸி. கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் குற்றம் சுமத்தப்பட்டு திணறிக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையிலேயே டேமியன் மார்ட்டினும் இதேபோன்றதொரு தொடர்பினால் தனது திருமணத்தைப் பறிகொடுத்துள்ளார்.

31 வயதான டேமியன் மார்ட்டின், கடந்த ஜூன் 14ஆம் திகதி ஹெலன் அப்பிள்யார்ட் என்பவரை திருமணம் செய்யவிருந்தார். ஆனால், இத்திருமணத்துக்கு எட்டு வாரங்கள் இருந்தநிலையில், இத்திருமணம் ரத்துச் செய்யப்போவதாக அறிவிக்கப்பட்டது.

டேமியன் மார்ட்டினின் தொலைபேசியில் இருந்த எஸ்.எம்.எஸ். தகவல்கள் மற்றும் பல சாட்சியங்கள் மூலம் வேறொரு பெண்ணுடன் மார்ட்டினுக்கு தொடர்பிருக்கிறது என்பதை ஹெலன் அப்பிள்யார்ட் அறிந்துகொண்டமையே இத்திருமணம் ரத்துச் செய்யப்பட்டமைக்குக் காரணம்.

- இவ்வாறு ஆஸ்திரேலிய பத்திரிகையொன்று ஆஸி. கிரிக்கெட் அணி வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த 21 வயதான பெண்ணொருவருடனேயே மார்ட்டின் தொடர்பு வைத்திருந்தார் எனவும், இது தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு கணிசமான தொகையொன்றை அப்பெண்ணுக்கு வழங்க பலர் முன்வந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய அணி முகாமையாளரான கொலின் யங் இது தொடர்பாகக் கூறுகையில்,

தொலைபேசி எஸ்.எம்.எஸ். தகவல்கள் மூலமாகத்தான் திருமணம் ரத்தானது என்ற வதந்தியை நானும் கேள்விப்பட்டேன்.

ஆனால், இது தொடர்பாக டேமியன் மார்ட்டினிடம் எப்போதும் கேட்கவில்லை.

உண்மையைச் சொல்வதென்றால், இந்தஜோடி (மார்ட்டின் - ஹெலன் அப்பிள்யார்ட்) இடையேயுள்ள வயது வித்தியாசமே இதற்கு காரணம். மார்ட்டினைவிட அவர் (ஹெலன்) 10 வயது மூத்தவர். எனது சிநேகிதியொருவரும் கூட.

பிள்ளைகள் பெறவிரும்பும்போது அது நடக்காத நிலையில்தான் வயது வித்தியாசம் பற்றி சிந்திப்பார் என நான் மார்ட்டினிடம் கூறிவந்துள்ளேன் என்றார்.

இவ்விடயம் தொடர்பாக விவரிப்பதற்கு ஹெலன் மறுத்துவிட்டார். இது ஓரளவு அப்பட்டமானது. ஆனால், கடந்த காலத்தில் நடந்தவை இவ்வளவுதான் நான் கூறமுடியும்" - இவ்வாறு ஹெலன் அப்பிள்யார்ட் கூறியுள்ளார்.

எனினும், 'தொலைபேசி தகவல்களே திருமணம் ரத்தாகியமைக்குக் காரணம். இது தொடர்பாக மார்ட்டினுடன் ஹெலன் வாக்குவாதம் செய்தார். அத்தகவல்கள் எங்கிருந்து வந்தன, எதற்காக வந்தன என்று விளக்குவதற்கு அவர் சந்தர்ப்பமளித்தார். எனினும், மார்ட்டின் மன்னிப்பு எதுவும் கோரவில்லை. பிரிவுக்கு அணி முகாமையாளர் கூறும் காரணம் தவறானது. 3 வருடங்களாக இருவரும் ஒன்றாக வாழ்ந்துள்ளனர். இவர்கள் இணைந்து பிள்ளை பெறமுடியாமல் போகலாம் என திருமணத்திற்கு 8 வாரங்களுக்கு முன்னர்தானா அறிந்தனர்?'

- இவ்வாறு கிரிக்கெட் வட்டாரங்கள் மேற்படி பத்திரிகையிடம் தெரிவித்துள்ளன.

## விளையாட்டு

## யாழ். வீரர் கொரியா பயணம்

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் சாதனை நிலைநாட்டிய யாழ். பல்கலைக்கழக மாணவன் சி.றஞ்சித்குமார் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக இன்று கொரியா பயணமாகின்றார்.

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அனைத்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் இவர் 110 மீற்றர் தடைதாண்டல், நீளம் பாய்தல், கோலூன்றிப்பாய்தல் ஆகிய மூன்றிலும் புதிய சாதனைகளை நிலைநாட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-5)

## தாச்சிப்போட்டியில் கட்டுடை விநாயகர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக.19

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் மானிப்பாய் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகமும் கட்டுடை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் சமநிலையில் இருந்ததால் 'பூவா தலையா' மூலம் ஆட்டத்தின் முடிவு தீர்மானிக்கப்பட்டது. இதில் கட்டுடை விநாயகர் வி.க. சம்பியனாகத் தெரிவானது.

# இங்கிலாந்து 118 ஓட்டங்களில் வீழ்ந்தது! தென்னாபிரிக்க அணியும் நெருக்கடியில்!!

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இரு அணிகளும் சமபல நிலையில் உள்ளன.

ட்ரெண்ட் பிரிட்ஜ் மைதானத்தில் இப்போட்டி நடைபெறுகிறது. போட்டியில் மூன்றாவது நாள் ஆட்டமுடிவில் இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஓட்டமெதுவுமின்றி ஒரு விக்கெட்டை இழந்திருந்தது.

அத்துடன், அன்றைய ஆட்டம் நிறுத்தப்பட்டது. நான்காவது நாளான ஞாயிறன்று ஷோன் பொலொக்கின் பந்து வீச்சில் இங்கிலாந்து அணியின் விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன. இதனால் இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து 118 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

நசார் ஹுசைன், அன்ட்ரூ பிளின்டொவ் இருவரும் தலா 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஷோன் பொலோக் 39 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இங்கிலாந்து அணிக்கு எதிரான பொலொக்கின் சிறந்த பந்து வீச்சுப் பெறுமதி இதுவாகும்.

தென்னாபிரிக்க அணி இப்போட்டியில் வெற்றி பெறுவதற்கு 202 ஓட்டங்கள் தேவையான நிலையில் நேற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

எனினும், விக்கெட்டுகள் தொடர்ந்தும் வீழ்ந்த வண்ணம் இருந்தன. இங்கிலாந்து வீரர்களின் சிறப்பான பந்துவீச்சால் தென்னாபிரிக்க அணி 50 ஓட்டங்களுக்குள் தனது 5 விக்கெட்டுகளை இழந்தது.

அதன்பின் 6ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த நீல் மெக்கன்ஸியும், மார்க் பௌச்சரும் மிக நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர்.

இந்நிலையில், போதிய வெளிச்சமின்மை காரணமாக, 11 ஓவர்கள் மீதமிருந்த நிலையில் நான்காவது நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது தென்னாபிரிக்க அணி 5 விக்கெட் இழப்பிற்கு 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மெக்கன்ஸி 58 பந்துவீச்சுக்களை எதிர்கொண்டு 6 ஓட்டங்களுடனும், பௌச்சர் 27 பந்துவீச்சுக்களை எதிர்கொண்டு 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஞாயிறன்று ஆட்டமுடிவின் போது தென்னாபிரிக்க அணி இப்போட்டியில் வெற்றிபெறுவதற்கு மேலும் 139 ஓட்டங்கள் தேவையான நிலையில் இருந்தது. (ம)

# சமாதானக் கிண்ண உதைபந்தாட்டம்: நேற்று கொழும்பில் ஆரம்பமாகியது

பம்பலப்பிட்டி சென். பீட்டர்ஸ் கல்லூரி ஏற்பாடு செய்துள்ள சமாதானக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று ஆரம்பமானது.

சென். பீட்டர்ஸ் கல்லூரியுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, மன்னார் சென். ஷேவியர் கல்லூரி ஆகியன இச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

ஆரம்ப வைபவம் நேற்றுக்காலை சென். பீட்டர்ஸ் கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

சென். பீட்டர்ஸ் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டார்.

மட்டு. - திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார், வத்திக்கானில் இறைபணியாற்றும் 'எம்.எஸ்.ஜி.ஆர், கமிலஸ் நிமலன் ஜோன்பிள்ளை அடிகளார் ஆகியோருடன் போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகளின் அதிபர்களும் இவ்வைபவத்தில் பங்குபற்றினர்.

எதிர்வரும் 23ஆம் திகதிவரை பம்பலப்பட்டி சென். பீட்டர்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இத்தொடரின் இறுதிப்போட்டி ஓகஸ்ட் 23ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. சம்பியனாகும் அணிக்கு சமாதான சவால் கிண்ணம் வழங்கப்படவுள்ளது.


## தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம்

யாழ். வீதி மானிப்பாயிலுள்ள பிரேம் நகைமாடத்தில்

கடந்த 16.08.2003 சனிக்கிழமை இரவு - பூட்டியிருந்த கடை - கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ரொக்கப்பணம் 5 லட்ச ரூபாவுடன் 45 லட்சம் பெறுமதியுடைய நகைகளும் களவாடப்பட்டுள்ளன.

இது பற்றிய தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P.No: 3178
777-060327

- உரிமையாளர்.

(21589) (29-16-18-31)

## மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம் கூறுவிலை கோரல்

மேற்படி ஆலயத்திற்கு பின்வரும் பொருள்கள் ஒரு தொகை தேவைப்படுகின்றது. அப்பொருள்களை ஆலயத்திற்கு விநியோகிக்கக்கூடியவர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகிறது.

1. ஒரு கியூப் சிவப்புமண் (செம்பாடு)
2. ஒரு கியூப் கட்டட இடிபாடுகள்
3. ஒரு கியூப் வயல்மண்
4. 30அடி நீளம், 15அடி அகலம் கொண்ட தகரப்பந்தல் செய்வதற்கான கூலி (பொருள்கள் ஆலயத்தால் வழங்கப்படும்).

மேற்படி கூறுவிலைகளை கடித உறையிலிட்டு,

தலைவர், தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம

என்ற முகவரிக்கு 25.08.2003 அன்று அல்லது அதற்கு முன்னதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

தர்மகர்த்தா சபை,

(21598) (29-16-18-31)

## தேவை

### சந்தைப்படுத்தல் பிரதிநிதி

எமது நிறுவனத்திற்கு மேற்குறித்த பதவிக்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை.

சம்பளம் :- மாதாந்தம் 8,000 ரூபாவும், இதர படிகளும்,

விவரங்களுக்கு:

"யசோ"

35, கன்னாதிட்டி வீதி. யாழ்ப்பாணம்,
(22.08.2003 இற்குமுன் விண்ணப்பிக்கவும்). (215929)

(31-16-18)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



காரைநகரின் கவின்மிகு பெருமைகளைக் கச்சிதமாக நல்ல கதாப்பிரசங்கம் மூலம் அறியத்தரும்

உயர்திரு. எம்.எஸ். ஸ்ரீ நாளன் (உதவிக் கல்விப்பணிப்பாளர்)

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- கே.எம்.விக்கினேஸ்வரன் (எரிபொருள் நிரப்பு நிலையம் ; மருதனார்மடம்).
- ச.சிவசுப்பிரமணியம் (பொட்டுமணியம்),
- சு.லட்சுமணன் (ஆசிரியர்- யாழ். இந்து.).

(21596) (31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சைவர் கழகத்தைச் சேர்ந்தவரும் சங்கானை மக்கள் வங்கி முகாமையாளருமாகிய

உயர்திரு. பொன் அச்சுதம்பிள்ளை அவர்கள்

வங்கிச்சேவையில் 25 வருடங்கள் நிறைவுசெய்து மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தில் தங்கப் பதக்கம் பெற்று மக்கள் சேவைத்திலகம் எனப்பாராட்டப்பட்டமை எமக்கு மகிழ்ச்சிதரும் செய்தியாகும். மேன்மேலும் சேவையில் உயர்ந்திட மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- அகில இலங்கை சைவர் கழகம்.

(21576) (31-16-18)

## கண்ணீர் அஞ்சலி

17.08.2003 அன்று மறைந்த எமது விரிவுரையாளர்

திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன்

அவர்களுக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


இரண்டாம் வருட (2001/2002 கல்வியாண்டு)
மொழியியல் சிறப்புக்கலை மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழம்.

(21591) (26-16-18-31)

# பிரிட்டிஷ், அமெரிக்க தலைவர்களின் அரசியல் எதிர்காலத்தை உலுக்கும் ஈராக் மீதான தாக்குதல்

**ஈராக் மீது படையெடுப்பது எனத் தீர்மானித்த அமெரிக்க அரசு அதற்குச் சில காரணங்களைத் தெரிவித்தது. ஆனால், அக்காரணங்கள் போலியானவை எனத் தற்போது வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்கத் தலைவருக்கு ஒத்து ஊதப்போன பிரிட்டிஷ் பிரமருக்கும் அவரது நாட்டில் எதிர்ப்பு வலுப்பெற்று வருகிறது. இது குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை. 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஈராக் நாட்டை அமெரிக்கப் படைகள் முழுமையாகக் கைப்பற்றிக் கொண்ட பின்னர், ஒரு மாதம் முதல் இரண்டு மாதம் வரையிலேயே அமெரிக்கப் படையினர் ஈராக்கில் தங்கிருக்க வேண்டியிருக்கும் என ஈராக் நாட்டின் தலைநகர் பக்தாத் நகரத்துக்குள் பிரவேசிக்கும் முன்னர் அமெரிக்க அரசின் கொள்கைவகுப்பாளர்கள் மதிப்பிட்டிருந்தனர். இந்தக் கால இடைவெளிக்குள் அமெரிக்க அரசினால் பிரேரிக்கப்படும் ஈராக்கிய இனத்தவர்களைக் கொண்டு உருவாக்கப்படும் நிர்வாக சபையிடம் ஈராக் நாட்டின் அதிகாரங்களைக் கையளிப்பதோடு, 30 ஆயிரம் பேருக்குக் குறைவான அமெரிக்க இராணுவத்தினரையே ஈராக் நாட்டில் நிறுத்தி வைத்திருக்க வேண்டி ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஈராக் நாட்டை முழுமையாகக் கைப்பற்றி, நூறு நாள்கள் முடிவடைந்துள்ள நிலையிலும் இன்னமும அமெரிக்கா தனது இராணுவத்தினரை ஈராக் நாட்டைவிட்டு விலக்கிக் கொள்



வதற்கான பொருத்தமான சூழ்நிலை உருவாகவில்லை. அமெரிக்க தரைப் படைப்பிரிவின் குறிப்பிட்டதொரு தொகையினர் மட்டும் ஈராக்கில் நிலைகொண்டிருப்பதுடன், தற்போதைய சூழ்நிலையில் அங்கு சட்டத்தையும் அமைதியையும் உறுதிசெய்ய வேண்டுமாயின், மேலதிகமாக 30 ஆயிரம் இராணுவ துருப்பினரைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. அமெரிக்காவின் பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்படாத விதத்தில், அத்தொகையினரான இராணுவத்தினரை ஈராக்கில் கடமையில் ஈடுபடுத்தமுடியாத நிலை நிலவுகிறது. இதனால் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து இராணுவத்தினரின் சேவையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், அவ்விதம் இராணுவத்தினரை அனுப்பி உதவுமாறு பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இது வரையில் அதற்குச் சாதகமான பலன் எதுவும் கிட்டவில்லை.

இந்திய , பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளிடமும், அராபியக் கூட்டமைப்பு நாடுகளிடமும் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பினும், உடனடியாக ஈராக்கிற்குத் தமது படைவீரர்களை அனுப்பி வைக்க அந்நாடுகள் தயாராயில்லை. ஈராக்கில் அமெரிக்க நிர்வாகத்தின் கீழ் இடம்பெறும் நடவடிக்கைகளில் பங்குகொள்ளத் தமது இராணுவத்தினரை அனுப்பிவைக்க அராபிய கூட்டமைப்பு நாடுகள் மறுப்புத் தெரிவித்துள்ளதோடு, ஈராக்கில் அமெரிக்கா உருவாக்கியுள்ள நிர்வாக அமைப்பையும் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளன. ஐ.நா.சபையின் மேற்பார்வையின் கீழ் மட்டுமே ஈராக்கிற்குத் தமது படைகளை அனுப்பிவைக்க முடியுமென்பது இந்தியாவின் நிலைப்பாடாகும். ஈராக் மீது போர் தொடுக்கும் அமெரிக்காவின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த ஜேர்மனி, ஐநா.சபை வேண்டிக்கொண்டால் மட்டுமே ஈராக்கிற்குத் தனது இராணுவத்தை அனுப்பத் தான் இணங்கமுடியுமெனத் தெரிவித்துள்ளது. ஆப்கான் யுத்தத்தின் போது அமெரிக்காவுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்த பாகிஸ்தான், ஐ.நா.சபையின் அனுமதியின்றி ஈராக்கிற்குச் தனது படைகளைத் தான் அனுப்பிவைத்தால், அது தனது நாட்டில் கொந்தளிப்பு நிலை உருவாக்கக் காரணமாகுமெனக் கருதி, இது தொடர்பான முடிவு மேற்கொள்வதை தள்ளிப்போட்டுக் கொண்டு செல்கிறது எனக்கருத இடமுண்டு. இருந்தபோதும், அமெரிக்க அரசுக் கொள்கை வகுப்பாளர்கள் எதிர்பார்க்கும் வகையில் ஈராக் நாட்டில் உருவாகும் எதிர்ப்பலைகளைத் தணிப்பதற்கு சர்வதேச நாடுகள் அங்கம் வகிக்கும் படைப் பிரிவொன்றை உருவாக்க முடியாதுள்ளது. அல்லது அவ்வித நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு மேலும் நீண்டதொரு காலம் செல்லக்கூடும்.

ஈராக் நாட்டினுள் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அரசுகளுக்கெதிராக நாளுக்கு நாள் அதிகரித்துவரும் எதிர்ப்பு உணர்வே இவ்வாறான நிச்சயமற்ற தன்மை உருவாகியுள்ளமைக்கான பிரதான காரணமாகும். சதாம் ஹுசையினது ஏகாதிபத்திய ஆட்சியின்கீழ் பல ஆண்டுகளாகத் துன்பம் அனுபவித்து வந்த ஈராக்கியப் பொது மக்கள், அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தினரைத் தமக்கு விடுதலை பெற்றுத்தர வந்துள்ள வீரர்களாகக் கருதுவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இடம்பெற்ற நிகழ்வுகள் அதற்கு எதிர்மாறாக அமைந்தன. கஷ்டங்களுக்கு ஆளானதோர் இனப்பிரிவினரோ அல்லது மதப்பிரிவினரோ, அமெரிக்க மற்றும் பிரித்தானிய அரசுகளின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை என ஜனாதிபதி புஷ், ஈராக்கை முற்று முழுதாகக் கைப்பற்றிக் கொண்ட வெற்றியை உலகத்துக்குப் பிரகடனப்படுத்திய தருணத்திலிருந்தே உணரத் தொடங்கினார். யுத்தம் இடம்பெற்ற இவ்வாண்டில் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் மூன்றுவார கால இடைவெளியில், போரில் மரணமடைந்த அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தினரின் எண்ணிக்கை, முன்னர் 1991ஆம் ஆண்டில் இடம்பெற்ற வளைகுடா யுத்தத்தில் மரணமடைந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையை விட மிக அதிகமாகும். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி ஈராக்கின் தலைநகர் பக்தாத்தினுள் பிரவேசித்த பின்னர், ஈராக்கில் மரணமடைந்த அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தினரின் எண்ணிக்கை, யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஏப்ரல் 9ஆம் திகதி வரை மரணமடைந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையை விட மிக அதிகமாகிக் காணப்பட்டது. விசேடமாக அண்மைய சில வாரங்களுள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற தாக்குதல்களால் மரணமடைந்த அல்லது காயமுற்ற அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தினரின் எண்ணிக்கை ஜனாதிபதி புஷ்ஷினால் விடுவிக்கப்பட்ட ஈராக்கில் இடம்பெறக் கூடுமென எதிர்பார்த்த நிகழ்வுகளல்ல. அமெரிக்கத் தகவல் பிரிவின் செய்திகளின்படி அமெரிக்க இராணுவத்தினர் தற்போது நாளொன்றுக்கு சராசரி 13 தாக்குதல் சம்பவங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்படுகிறது.

ஏனைய கெரில்லா தாக்குதல்களைப் போன்றே இவையும் இடம்பெறுவதால் பக்தாத் நகரத்திலிருந்து சர்வதேச விமான நிலையத்துக்கு செல்லும்பாதையின் பாதுகாப்பே கேள்விக்குறியாக மாறியுள்ளது. இவ் யுத்தத்தை வழி நடத்திய அமெரிக்க அரசின் பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட் மற்றும் அவரது உதவியாளர் போல் செவ்பொவிட்ஸ் ஆகியோர் அண்மைக்கால தாக்குதல்கள் யாவும் சதாம் ஹுசையினது நெருக்கிய ஆதரவாளர்களால் நடத்தப்படும் 'ஒப்பந்தக்கொலைகள்' என விவரித்துள்ள போதும், இந் நிலைமை அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவ வீரர்களின் மனத்தைரியம் பாதிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாய் அமைந்துள்ளது.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க மற்றும் பிரித்தானிய இராணுவத்தினரின் மனநிலை பாதிப்படைவது மட்டுமன்றி, ஈராக் யுத்தம் தொடர்பாக அவ்விரு நாடுகளின் பொதுமக்களிடையே உருவாகிவரும் விமர்சனங்கள் மற்றும் கருத்துக்கள், புஷ் மற்றும் பிளேயர் ஆகியோர்களின் அரசியல் எதிர்காலத்துக்குப் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்துவனவாகத் தோன்றுகின்றது. யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு நூறு நாள்கள் கழிந்துவிட்ட நிலையிலும், யுத்தத்துக்குக் காரணமாகக் கூறப்பட்ட இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களையோ, அல்லது பேரழிவு விளைவிக்கத்தக்க ஆயுதங்கள் எவற்றையுமே இதுவரை ஈராக்கில் தேடிக்கண்டுபிடிக்கமுடியவில்லை. இதனால் இவ்விரு தலைவர்களும், தத்தமது நாட்டுப் பொது மக்களுக்கு தவறான தகவல்களைத் தெரிவித்ததன் மூலம் அவர்களை அகௌரவப்படுத்தியதாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமுள்ளன. ஐ.நா. சபையின் ஆயுதப் பரிசோதகர்களில் ஒருவராகக் கடமையாற்றிய பிரித்தானிய அணுவிஞ்ஞானி கலாநிதி டேவிட் ஹெலி'யின் தற்கொலைச் சம்பவத்தால் பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் பெரும் இக்கட்டான நிலையை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது. நாட்டின் மதிப்புக்குரியதொரு பிரஜையான கலாநிதி டேவிட் ஹெலி, தற்கொலை செய்து கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்ற கேள்வியும் தலைதூக்கியுள்ளது. ஈராக் மீதான ஆக்கிரமிப்புக்கு முடிவு மேற்கொள்ளப்பட்ட வேளையில், பிரித்தானியப் பிரதமர் வஞ்சகமாகச் செயற்பட்டதாக உறுதி செய்யப்படும் தகவலால் இவ்வித சந்தேகம் எழுந்துள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் பிரகாரம் அதில் பங்குபற்றியோரில் நூற்றுக்கு 80சதவீதத்தினர் 'பிரதமர் ரொனி பிளேயர் ஒரு பொய்யர்' என்றே அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஈராக்கின் மீது ஆக்கிரமிப்பு ஆரம்பிக்கப்பட்ட வேளையில் ரொனி பிளேயருக்கு கொன்சர் வேட்டிவ் கட்சி பூரண ஆதரவு வழங்கிய போதிலும், அவ்வாதரவு தொடர்ந்தும் அவருக்குக் கிடைக்கக்கூடும் எனக் கூறமுடியாதுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் நிலைமை இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். ஈராக்கினுள் மறைத்துவைக்கப்பட்டுள்ள்தாகக் கருதப்பட்ட இரசாயன ஆயுதங்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்காகக் கடந்த ஜூன் மாதத்தில் ஜனாதிபதி புஷ் நியமித்த குழுவினால் அவ்வாயுதங்கள் தொடர்பான பெறுமதியான எத் தகவல்களையும் இதுவரையில் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. டேவிற் ஹெலியின் தலைமையிலான ஆயிரத்து 400 பேர் கொண்ட குழுவினர் பல நாள்களாக மேற்கொண்டதேடுதல் நடவடிக்கையின் பலனாகப் பெறப்பட்ட ஒரேயொரு பெறுமதியான தகவல், ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துமாறு சதாம் ஹுசைன் தனது படை அதிகாரிகளுக்கு வழங்கிய கட்டளைக் கடிதத்தின் பிரதியொன்று மட்டுமே. தற்போது அமெரிக்காவினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல ஈராக்கிய விஞ்ஞானிகளும் இவ்வாக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பமாவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே சதாம் ஹுசைன் தம்வசமிருந்த இரசாயனம் மற்றும் உயிரியல் ஆயுதங்களை அழித்துவிட்டதாகத் தெரிவித்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். ஆயுத பரிசோதனைக் குழுவின் தலைவராகப் பணியாற்றிய டேவிற் ஹெலி, இவ்வாக்கிரமிப்பு யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஈராக் நாட்டிடம் இரசாயனம் மற்றும் உயிரியல் ஆயுதங்கள் உள்ளன என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை என அடிக்கடி தொலைக்காட்சி மூலம கருத்து வெளியிட்டுவந்தார். குறிப்பிட்ட ஆயுதங்கள் டைக்கிரீஸ் மற்றும் யூப்பிரட்டீஸ் நதிகளில் வீசப்பட்டிருக்கவும் சாத்தியம் உண்டு என்ற சந்தேகமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழில்: வியெஸ்ரீ**

கொள்கையளவிலான தீர்மானம் மேற்கொள்ளும் தருணங்களில் அதிகாரம்மிக்க அமைப்பான செனட் சபையின் வெளியுறவுப் பிரிவுத் தலைவர் செனட்டர் டிக்லூகரின் கருத்துப்படி, இவ்விணைந்த யுத்த நடவடிக்கைகள் ஜனாதிபதி புஷ்ஷின் ஆலோசகர்கள் வழங்கிய தவறான தகவல்கள் காரணமாகவே தோல்வியடைய நேர்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அவர் தகவல் தெரிவிக்கையில், இவ்யுத்தம் விரைவில் முடிவடையும் சாத்தியம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இருந்தபோதிலும், யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பிருந்தே அமெரிக்க இராணுவத் தலைவர்கள் நிகழ்வுகள் இவ்விதம் இடம்பெறக்கூடும் என எதிர்பார்த்திருந்ததாகத் தெரியவருகின்றது. யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கக் காங்கிரஸ் சபை முன் ஆஜராகி விளக்கமளித்த முன்னாள் அமெரிக்க இராணுவ தலைமை அதிகாரி ஜெனரல் எரிக்கே சின்செகி ஈராக்கைப் பணியவைப்பதாயின் அதற்காக லட்சக்கணக்கான இராணுவத்தினர் ஈராக்கில் நீண்டகாலம் பணியாற்ற வேண்டியிருக்கும் எனத் தெரிவித்திருந்தார். இவ்யுத்தத்தை முன்னின்று நடத்திய ஜெனரல் டொம் பிரான்ஸ், கொரியாவில் போன்று சிலவேளை நீண்டகாலத்திற்கு அமெரிக்க இராணுவத்தினர் ஈராக்கில் நிலைகொண்டிருக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ளார். சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பல இராணுவ அதிகாரிகள் 'வாஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகைக்குத் தெரிவித்த கருத்தின்படி, ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினர் தொடர்ந்தும் பல சிரமங்களின் மத்தியில் போரில் ஈடுபடவேண்டியிருக்கும் என்பதோடு, இவ்வித கெரில்லாத் தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லக்கூடும் 'எனவும் தெரிய வருகின்றது.

நிலைமை அவ்வாறான போதிலும் இத்தாக்குதல்களை தம்மால் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரமுடியும் என்பதே றம்ஸ்பெல்ற் உட்பட யுத்த நோக்குக் கொண்ட தலைவர்களது கருத்தாகும். ஈராக்கில் நிர்வாகத்தை மேற்கொள்ளும் பொருட்டு அமெரிக்காவினால் நியமிக்கப்பட்டுள்ள போல்பிறேச்சர் தற்போதைய ஈராக்கின் நிலைமையைக் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார்.

நாம் இவ்யுத்தத்தின் மூலம் எமது நோக்கத்தை அடைந்ததாக வேண்டும். எம்மை எதிர்ப்போரைக் கைதுசெய்யவோ கொன்று விடவோ வேண்டி ஏற்படக்கூடும். ஈராக் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி சமாதானத்தை உறுதிப்படுத்தும் வரையும் நாம் இவ்யுத்தத்தில் ஈடுபட நேரிடலாம். நாம் தற்போது சதாமின் தீவிர ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். அது தொடர்ந்து மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். தேர்தல் ஒன்றை நடத்துவதோ அல்லது வேறொரு மக்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடுவதோ இந்தச் சந்தர்ப்பத்தில் பயனளிக்கப்போவதில்லை. இதன்காரணமாகவே 25 பேரை உள்ளடக்கிய நிர்வாகசபை ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார் . அதே சமயம், 'பாத்' கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலோ அல்லது அமெரிக்க நிர்வாகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலோ பொதுக்கூட்டம் எதனையோ, அறிவிப்பு அல்லது கருத்து வெளிப்பாடு எதனையோ மேற்கொள்வதற்கு தடைவிதிக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், ஈராக்கில் அமெரிக்க இராணுவத்தினரின் யுத்த நடவடிக்கையில் நூறு நாள் நிறைவு குறித்து ஜனாதிபதி புஷ் வெளியிட்ட செய்தியில், அப்பிராந்தியத்திலேயே ஜனநாயகமும் சுபீட்சமும் கொண்ட நாடொன்றுக்கு உதாரணமாக விளங்கக்கூடிய வகையில் ஈராக் நாட்டை நாம் உருவாக்குவோம் எனத்தெரிவித்துள்ளார்.

ஈராக் நாட்டின் மீது போர் தொடுப்பதற்காக முன்வைக்கப்பட்ட காரணங்கள் மற்றும் நாட்டு மக்களுக்குத் தவறான தகவல்களை வழங்கியமை ஆகிய காரணங்கள் ஜனாதிபதி புஷ்ஷுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதற்கு போதுமானவை என்பது சில அரசியல் விமர்சகர்களது கருத்தாகும். இரசாயன ஆயுதங்கள் மற்றும் உயிரியல் ஆயுதங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தவறான குற்றச்சாட்டுகள் எனத தெரிந்து கொண்டே அவ்விதம் புஷ் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியதற்காக சில காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சதாம் ஹுசைனின் உயிரியல் ஆயுத தயாரிப்புக்காக அவசியமான நயீகர் அமிலத்தை வெவ்வேறு நாட்டிடமிருந்து விலைக்கு வாங்கியதா சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஆயுத பரிசோதனைக் குழுத்தலைவர் நிராகரித்திருந்தார். இவை யாவற்றையும் தெரிந்திருந்தும் அழிவுகளை ஏற்படுத்தும் யுத்தத்தை ஆரம்பித்தமையாலும் எதிர்பார்த்தவிதத்தில் ஈராக்கிய பொது மக்களின் ஆதரவு கிட்டாமையாலும் ஜனாதிபதி புஷ் அமெரிக்க பொது மக்களைத் தவறான வழியில் இட்டுச செல்வதாகக் கருத வாய்ப்பு உண்டென கருத முடிகிறது.

'வாட்டர் கேற்' ஊழலை வெளியுலகிற்கு வெளிப்படுத்திய ஜோன்டீடினது கருத்துப்படி புஷ் கூறிய பொய்யான தகவல்களுடன் ஒப்பிடும் போது வாட்டர் கேற் ஊழலில் சம்பந்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி றிச்சட் நிக்சன் மேற்கொண்ட தவறு, கணக்கில் எடுக்கப்படக்கூடிய அளவுக்கு அவ்வளவொன்றும் பாரதூரமானதல்ல என்பதாகும் புஷ்ஷுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதி நிக்சனின் ராஜினாமாவுக்கு காரணமான குற்றச்சாட்



டைவிட கனதிமிக்கவையாகும்.

ஈராக் நாட்டுப் பொதுமக்கள் தொடர்ந்தும் எவ்வளவு காலத்துக்கு அமெரிக்கா மீது எதிர்ப்புக்காட்ட முடியும் என்பதைக் கணிக்க முடியாததாயினும், கடந்து சென்ற நூறு நாள்களிலும் ஈராக் விடயத்தில் அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அரசுகளின் யுத்த அணுகுமுறையாவும் தோல்வியையே தழுவியுள்ளதாகக் கருத முடியும். ஈராக்கைக் கைப்பற்றி அந் நாட்டை தமது முழுக்கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தபின்னர் சவூதி அரேபியா, கட்டார் மற்றும் குவைத் ஆகிய நாடுகளில் நிலைகொண்டுள்ள அமெரிக்க இராணுவத்தினரை அவ்விடங்களில் இருந்து விலக்கி, ஈராக்குக்கு கொண்டுவருவதென்ற தனது திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள அமெரிக்காவுக்கு இதுவரை சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஈராக்கில் தற்போது நிலவும் பாதுகாப்பற்ற நிலைமையே இதற்கான முதற்காரணமாகும். சிரியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை நலிவுறச்செய்யும் அல்லது தமது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கும் ஓர் எண்ணம் ஏற்கனவே அமெரிக்காவுக்கு இருந்து வந்துள்ளது. தற்போது ஈராக்கில் நிலவும் அசாதாரண நிலையால் அவ்வித எண்ணத்தை தற்காலிகமாகவேனும் கைவிடவேண்டியநிலை உருவாகியுள்ளது.

ஈராக்கில் தமது நிர்வாகத்தை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்கு முன்னர் மேலும் இரு நடவடிக்கைகளை செயறபடுத்த முனைவது சிரமத்தை ஏற்படுத்துமென அமெரிக்கப் பாதுகாப்புத் துறையான பென்டகன் கருதுவதே இதற்கான காரணமாகும். பலஸ்தீனத்தின் சமாதான வழிகள் யாவும் தடைப்பட்டு மீண்டும் ஒரு தடவை ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்துள்ள நிலையில் சிரியாவுக்கும் ஈரானுக்கும் எதிரான இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பது பெரும் சிரமத்தை அளிப்பது மட்டுமன்றி கடினமான முயற்சியாகவும் அமையக்கூடும். எதிர்பார்க்கப்பட்ட எண்ணெய் வளத்தை அடையும் குறிக்கோள் மேன்மேலும் பின்னடைவுகளைச் சந்திப்பதால் புஷ் மற்றும பிளேயர் ஆகிய இருதரப்பினரும் அரசியல் சிக்கல் ஒன்றை அண்மித்துள்ளனர் என்பதில் சந்தேகம் கிடையாது. ★

# யாழ். மாவட்ட நியாப் திட்டத்தில் தொடர்ந்தும் நிதிக் குறைப்பு ஏன்?

**யாழ்.** மாவட்ட நியாப்திட்ட நிதி வெட்டிற்கு யார் காரணம் என்ற உதயனில் வெளியான வாசகர் திருமுகத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் விளக்கம் 3 ஆம் திகதி உதயனில் பிரசுரிக்கப்பட்டது. மக்கள் மத்தியில் உண்மை நிலை பற்றி தெளிவு ஏற்பட்டுள்ள போதிலும் வாசகரின் வினாவிற்குரிய விடை இன்னமும் கிடைக்கவில்லை. ஏனெனில், திட்ட முகாமைத்துவ அலகு தனது விளக்கத்தை இன்றுவரை கொடுக்கவில்லை.

தற்பொழுது இருபது மையக் கிராமங்களில் நியாப் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவற்றில் மக்களின் ஜீவனோபாய ஆதரவுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூபா 32 லட்சம் முன்பு ஒதுக்கப்பட்டது. இப்போது அந்த ஒதுக்கீடு 11 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, பொது மண்டபத்திற்கு ரூபா 6 லட்சமும் சுழற்சி நிதிக் கடனுக்கு ரூபா 5 லட்சமும் என ஒதுக்கீடுபற்றி அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குடிதண்ணீர்க் கிணறுகள், வீதிகள் திருத்தம் மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைகள் கைவிடப்பட்டுள்ளன.

பெரிய எதிர்பார்ப்புடன் இருந்த மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். சில கிராமங்களில் முரண்பாடுகளும் ஏற்பட்டுள்ளன.

உதாரணமாக கப்புதூ கிராமத்தில் முன்னுரிமையாகத் தெரிவு செய்யப்பட்ட வீதித்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. அதனால் கவலையடைந்த பெரும்பாலான மக்கள் திருகோணமலையில் உள்ள திட்டபணிப்பாளருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.




இப்பிரச்சினை தொடர்பாக பல மட்டங்களிலும் கலந்துரையாடல்கள் நடத்தினோம். அதன் மூலம் பெற்ற பெறுபேறுகளை இங்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

யாழ்.மாவட்டத்திற்குரிய மொத்த ஒதுக்கீடு ரூபா 40கோடியிலிருந்து ரூபா 8 கோடியாக குறைக்கப்பட்டது. ஆனால், ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டு வேலைகள் நடைபெறுகின்ற 20 கிராமங்களின் ஜீவனோபாய ஆதரவுச் செயற்பாடுகளுக்குரிய ஒதுக்கீடு (தலா 32லட்சம்) குறைக்கப்பட்டதாக உலக வங்கியோ, அல்லது திருகோணமலை திட்ட முகாமைத்துவ அலகோ அறிவிக்கவில்லை. ஆகையால், தற்போதைய இந்த நடவடிக்கை மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதெனவே எண்ணவேண்டியுள்ளது.

மாவட்ட மட்டத்தில் ரூபா 3 கோடி மதிப்புடைய புதிய 21 பொறியியல் வேலைகளை மேற்கொள்வதற்கு சில அதிகாரிகள் ஆவலாக உள்ளனர். அதை எப்படியேனும் நியாப் திட்டத்திற்குள் புகுத்த அவர்கள் முனைகின்றனர்.

இதற்காக தற்போது நியாப் திட்டம் அமுல் செய்யப்படும் 20 கிராமங்களின் ஒதுக்கீட்டை வெட்ட வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

இதனாலேயே ஒரு கிராமத்திற்கு ஒதுக்கப்பட்ட 32 லட்சம் ரூபா நிதி 11லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளதென கூட்டங்களில் தெரிவித்து வருகின்றனர்.

இந்நடவடிக்கை கிராமிய மக்களுக்கு இரு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

முதலாவதாக, தெரிவுசெய்யப்பட்ட கிராமம் சிறிய ஒதுக்கீட்டோடு முழுமையான அபிவிருத்தி அடையமாட்டாது. இரண்டாவதாக மாவட்டத்திற்கு வரப்போகும் அபிவிருத்தித் திட்டங்களில் இக் கிராமங்கள் தெரிவு செய்யப்படமாட்டாது.

மக்களுடன் கலந்தாலோசியாமல் அதிகாரிகள் தன்னிச்சையாக மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகள் போல் இவை தோன்றுகின்றன. உள்நோக்கமுடைய மேற்குறிப்பிட்ட செயற்பாட்டிற்கு, 40 கோடி நிதி ஒதுக்கீடு 8 கோடியாக குறைக்கப்பட்டதென காரணம் காட்டும் தந்திரம் மக்களை ஏமாற்றும் முயற்சியாகும்.

உண்மையில் 40 கோடி ஒதுக்கீட்டில் 100 கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கென திட்டமிட்டப்பட்டிருந்தது. 8 கோடியாக ஒதுக்கீடு குறைக்கப்பட்ட பொழுது முழுத் திட்டத்திலிருந்து 80 கிராமங்களைக் குறைத்து 20 கிராமங்களுக்கு மட்டுப்படுத்த வேண்டுமென மதிப்பீட்டுப் பட்டறையில் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட 20 கிராமங்களின் ஒதுக்கீட்டை வெட்டி ஏன் புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவேண்டும் என்பதை பொறுப்பான அதிகாரிகள் மக்களுக்கு பத்திரிகை ஊடாக விளக்க கடமைப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த உலக வங்கி பிரதிநிதியிடம், யாழ்மாவட்ட மக்களின் வாழ்கை நிலையைப் பற்றியும் காலம் காலமாக மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்ததனையும் எடுத்துக் கூறினோம். உதாரணமாக 1980களில் 16 மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்ட பாரிய ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டமானது யாழ். மாவட்டத்தில் அமுல் செய்யப்படவில்லை. தற்பொழுது 12 மாவட்டங்களில் அமுல் செய்யப்படும் நியாப் திட்டம்கூட சிறிய அளவிலேயே இங்கு முன்னெடுக்கப்படுகின்றது எனச் சுட்டிக்காட்டினோம்.

தற்போதைய நியாப்திட்டத்தின் தொடர் திட்டமொன்றை அமுல் செய்வதற்கு உலக வங்கி உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்தர். அதற்குரிய தயாரிப்பு வேலைகள் செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கு மெனவும், அதில் 150 கிராமங்கள் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யக்கூடிய வாய்ப்பு உண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

ஆகவே, கிராமிய மக்கள் தமது தேவைகளைக் தெளிவாக இனங்கண்டு திட்டங்களை வடிவமைப்பதற்குரிய பக்குவத்தை விரைவில் அடைய வேண்டுமென நாம் கேட்டுக் கொள்கின்றோம். இனி வரும் காலங்களில் அதிகாரிகளின் விருப்பு, வெறுப்பிற்கு இணங்க கிராமங்களைத் தெரிவுசெய்வதற்கு அனுமதிக்கக் கூடாது. தெளிவாக வரையப்பட்ட தெரிவுக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே கிராமங்கள் தெரிவுசெய்யப்படும் நடைமுறையை நாம் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். இச் செயற்பாடுகள் ஒளிவு மறைவின்றி, மக்கள் பங்கேற்புடன் இடம்பெற்றாலேயே உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்குரிய பங்கு சென்றடைய வழிகோலும். *

## ஆய்வுகூட தொழில்நுட்ப கற்கைக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஓக.19

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் ஆய்வுகூட தொழில்நுட்ப உயர் சான்றிதழுக்கான நிகழ்ச்சித் திட்ட கற்கைநெறி பயிலவிரும்புவோருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கற்கைநெறிக்கான தகைமைகளாக இலங்கைப் பல்கலைக் கழகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக பதவி வகித்தல் அல்லது ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணிதம் அல்லது விஞ்ஞான பாடநெறியைப் பின்பற்றி ஏதேனும் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு சமவலுவுள்ளதும் பல்கலைக்கழகப் பேரவையால் ஏற்றுக் கொள்ளகூடியதுமான கற்கைத் தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பப் படிவங்களை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

விண்ணப்ப முடிவுதிகதி அடுத்த மாதம் 13ஆம் திகதி எனவும் - பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார். (எ-69)

---

## நெஞ்சம் மறவாத 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 31 - 08 - 1961



மறைவு 25 - 07 - 1997

### திருமதி கனகரத்தினம் சத்தீஸ்வரி

ஆண்டுகள் ஆறு ஆயிற்றோ அந்தோ நீர் பிரிந்து
ஈண்டு உமை நினைந்தே இப்பூவுலகில் வாழ்கிறோம்
அம்மா! நீங்கள் மறைந்தாலும் கதிர்காமக் கந்தன்
எங்களைக் காத்தருள் புரிகின்றான்! தம்பி யசிந்தன்
உங்களை அழைத்தாலும் உங்கள் முகம் எங்கள் கண்
முன்னே நிழலாய்த் தெரியுதம்மா! தாயிற்
சிறந்தொரு கோயிலுமில்லை ஆகவே உங்களைத்
தெய்வமாக நினைந்து வணங்குகின்றோம் தாயே!
தம்பியைத் தந்துவிட்டு மறைந்து விட்டீரே அம்மா!
ஆண்டுகள் ஆறல்ல பல வருடங்கடந்தாலும் உங்களை
மறக்கவே மாட்டோம் அம்மா!

இன்று அன்னாரின் ஆறாம் ஆண்டு நினைவு நிகழ்வு எமது இல்லத்தில் கொண்டாடப்படுகிறது.

*கதிர்வேலவன் அரிசி ஆலை,*
*கதிர்வேலவன் களஞ்சியம்,*
*கைதடி.*

- சி.கனகரத்தினமும்.
பிள்ளைகளும்.

(21590) (25-23-11-18)

---

## நூல் வெளியீட்டு நிகழ்வு

"இலங்கையின் பொருளாதார வரலாறு
வடக்குக் கிழக்குப் பரிமாணம்"

நூலாசிரியர் கலாநிதி வி.நித்தியானந்தம்
([illegible] பல்கலைக்கழகம், [illegible], யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.)

காலம் : 20.08.2003 புதன்கிழமை பி.ப 3.00மணி
இடம் : நூலக கேட்போர் கூடம் யாழ்.பல்கலைக்கழகம்.
*ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*யாழ்.பல்கலைக்கழகம்.* இளம் பொருளியலாளர் மன்றம்.

(21584) (25-23-11-18)

---

## விற்பனைக்கு

*மோட்டரோலா தொலைபேசி*
*இணைப்புடன்*
*விற்பனைக்குண்டு.*

தொடர்பு:
021 222 5874.

(21506) (26-23-11-18)

---

## கண்ணீர் அஞ்சலி

17.08.2003 அன்று மறைந்த எமது விரிவுரையாளர்

### திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன்

அவர்களுக்கு கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*யாழ்.பல்கலைக்கழம்.* 3ஆம் வருட மாணவர்கள்
மொழியியல் - ஆங்கிலத்துறை

(21588) (23-11-18)

---

## நெஞ்சம் மறவாத நினைவஞ்சலி

21ஆம் ஆண்டு

மலர்வு 20 - 05 - 1913



உதிர்வு 15 - 03 - 1982

**அமரர் சீனி - துரை**

முதலாம் ஆண்டு

மலர்வு 08 - 01 - 1927



உதிர்வு 29 - 08 - 2002

**திருமதி துரை நவலோகபூபதி**

எங்கள் அன்புத் தெய்வங்களே! எமக்கு நிறைவான வாழ்வினைத் தந்தீர்கள் மறவாது என்றும் போற்றுகின்றோம்!! நினைவுகள் இனிமையானவை என்றும் துணையானவை. இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை கட்டுவன் தெல்லிப்பழை இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*புனித அந்தோனியார் கோவிலடி.,*
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.*

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், கட்டுவன் - தெல்லிப்பழை.

(சி-29620) (25-23-11-18)

---

## மரண அறிவித்தல்

### குமாரவேலு மதியாபரணம்

(ஓய்வு பெற்ற மருந்துக் கலவையாளர்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு மதியாபரணம் 15.08.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் மார்க்கண்டு, நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் கமலாவதி (திருநெல்வேலி), கருணாதேவி (ஆசிரியை, சிந்மயபாரதி வித்தியாலயம், சுதுலை), சாந்தகுமாரி (கனடா), கருணாகரன், கிருபாகரன், கமலினி (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயரத்தினம், சிவசுப்பிரமணியம், பாலசிங்கம் (கனடா), சிவசங்கரன் (சுவிஸ்), குமுதினி (சுவிஸ்), கௌரி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் சுதர்சினி (சுவிஸ்), சுகந்தி, சுபத்திரா, கஜன், ரூபன் (லண்டன்), சிறீதரன், பவசாந்தன், பிரசாந்தன், துர்க்கா (கனடா), மயூரன் (கனடா), சிவபரன் (சுவிஸ்), அஸ்வினி (சுவிஸ்), கேவின் (சுவிஸ்), பிறேம்குமார் (சுவிஸ்), கிருஷ்ணகுமார் ஆகியோரின் அன்புப் பேரனும் பிரவீன், தனுஜன், ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2003) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தாவடி இந்துமாயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*தாவடி தெற்கு,*
*மானிப்பாய்.*

தகவல்:
விஜயரத்தினம், சிவசுப்பிரமணியம்
(மருமக்கள்)

(21586) (23-11-18)

**STUDY B.Eng IN INDIA**

**ADMISSIONS 2003 - 04**
**VINAYAKA MISSIONS' GROUP OF COLLEGES**

www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V.INSTITUTE OF TECHNOLOGY (A.V.I.T)
(Approved by AICTE, New Delhi,
Affiliated to Anna University)
Paiyanoor, Chennai. TAMIL NADU

**B.Eng Degree** (4 years)

Electronics & Communication Engg. (ECE)
Mechanical Engg. (Mech.)
Electrical & Electronics Engg. (EEE)
Computer Science & Engg. (CSE)

Eligibility: Pass in Maths, Physics, & Chemistry at GCE A' Level

*Contact for more details: -*
NN EDUCONSULT
181/1 W.A. Silva Mawatha,
Colombo - 6.
Telephone:075 55 88 44
021-2222797
E mail:nnimpex@slnet.lk

*SPOT ADMISSIONS 20th 21st & 22nd August At "Uthayan" office Kasturiyar Road, For Sri Lanka Students*


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 30 - 12 - 1934



மறைவு 19 - 08 - 2002

### திருமதி ஞானப்பிரகாசம் மேரி யோசேப்பின்

அன்பின் சிகரமாய் அனைவருக்கும் ஆறுதலாய்
புன்னகை யரசியாய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மையும் வாழ வழிசமைத்து மறைந்த தெய்வமே!
ஆண்டு ஒன்றானாலும் ஆறவில்லை - எம் துயரம்!

*137, நாவலர் வீதி,*
*ஐந்து சந்தி,*
*யாழ்ப்பாணம்.* (215797) (31-16-18)

உங்கள் நினைவில் :
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## கண்ணீருடன்......

எமது மன்றத்தின் மூத்த உறுப்பினரும், நீண்ட காலப் பணியாளனும், படைப்பாளர்களின் துணையாளனுமாய் பணிபுரிந்த



### மனவல் டோனாஸ் (அருமன்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆறாத்துயருமடைந்தோம். அவருக்கு எமது நெஞ்சம் கனக்கும் கண்ணீர்த்துளிகளை காணிக்கையாக்கி, அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆன்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

இயக்குநர்,
அங்கத்தவர்கள்
திருமறைக் கலாமன்றம்.

குறிப்பு : இன்று பிற்பகல் 3.15 மணியளவில் அவரின் பூதவுடல் எமது மன்றத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் எமது மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம்.
(சி-29623) (31-16-18)

## கடல்வள ஆசிரியர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.19

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில், பாடசாலையில் இருந்து கடல்வளப் பாடத்திற்கு தோற்றவுள்ள மாணவர்களை பரீட்சைக்குத் தயார்படுத்துவது தொடர்பான செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடல்வளப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு மீன்பிடியியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)


**லஷ்சுமி சினிமா** இணுவில்

இன்று முதல் (18.08.2003)
அல்டிமேட் ஸ்டார்
அஜித் - சாருகான் மற்றும் பலர் நடிப்பில்
**சாம்ராட் அசோகா** (21565)
(ஹிந்தி படத்தின் தமிழாக்கம்) ரீல்ஸ்
காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (புதியநேரம்).

**நாகம்ஸ்** சுன்னாகம்

சரத்குமார், தேவயானி, நெப்போலியன், விவேக் நடித்த
**தென்காசிப்பட்டணம்**
காட்சி நேரம் : 11.00, 3.00,
**Behind Enemy Lines**
(தாக்குதல் நிறைந்த படம்)
காட்சி நேரம் : இரவு 7.00 மணிக்கு
(31-14) (C29232)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன், கிரண் நடித்த
**பரசுராம்**
தினசரி காட்சி: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**BLUE STREAK**
தினசரி 8.45 இற்கு.
(C29213) (31-16-18)

**ராஜா** யாழ்ப்பாணம்

எதிர்வரும் 28ஆம் திகதி வரை
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு.
விஜயகாந்த், கிரண், விவேக் நடித்த
**தென்னவன்**
காட்சிகள்: 10.30,2.30,6.30,9.30 (பு.நே.)
(C29338) (31-16-18)

**லிபேட்டி** அச்சுவேலி

இன்று முதல்
அஜித் இருவேடங்களில், சிம்ரன், விவேக் நடித்த
**வாலி** (ரீல்ஸ்)
தினசரி: 3.00, 7.00
காலை 11.00 **THE PEACE KEEPER**
(C29873) (31-16-18)


## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, B.Sc. தனியார் நிறுவனத்தில் தொழில்புரியும், 5'5", அச்சுவினி, 6ஆம் பாதம் லக்கினத்தில் செவ்வாய் (பாவம் 44), வயது 28, அழகிய மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர்.

*தொடர்பு :*
விள.இல,1993
உதயன், யாழ்ப்பாணம்.
(21599) (29)

# மரண அறிவித்தல்கள்

## மனவல் டோனாஸ் (அருமன்)

குருநகரைச் சேர்ந்தவரும் திருமறைக் கலாமன்ற பணியாளருமான மனவல் டோனாஸ் (அருமன்) அவர்கள் நேற்றுமுன்தினம் (17.08.2003) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனவல் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மரியராணியின் அன்புக் கணவரும் மாகிறிஸ், காலஞ்சென்ற கனுசா, ஸ்ரீசா, யேசு ஆகியோரின் சகோதரரும் இராசு (இந்தியா), அன்ரன், கமில்ரன், பவா, மரினா, ராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சுரேன், வசந்தி ஆகியோரின் மாமனாரும் சுபன், அஜய், அஜேந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, பி.ப. 3.15 மணியளவில் யாழ். திருமறைக் கலாமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர், யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 15/1, தண்ணீர்த்தாங்கி,*
*5ஆம் குறுக்கு வீதி,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (C/29624) (29-16-18-31)

தகவல்:
அன்ரன் (மகன்).

## திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன்

**(விரிவுரையாளர், ஆங்கில மொழியியல் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்)**

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பாதேவி ஸ்ரீதரன் அவர்கள் 16.08.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இ.ஸ்ரீதரன் (M.S. மத்திய மின்நிலையம், சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும் பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் இராசரத்தினம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும் மனோகரி (நோர்வே), சிவநாதன் (ஜேர்மனி), தபோதினி ஆகியோரின் சகோதரியும் குகதாஸன் (நோர்வே), புவனேஸ்வரி (ஜேர்மனி), பாஸ்கரன், முரளீதரன், வித்தியா, கோணேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்தினியும் ஜனார்த்தனி, அமரகா ஆகியோரின் சிறிய தாயாரும் நதுர்சனின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2003) புதன்கிழமை காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொடிகாம வீதி,*
*நெல்லியடி.* (C/29626) (29-16-18-31)

தகவல்:
இ.ஸ்ரீதரன் (கணவர்).

## திருமதி கமலாம்பிகை சுப்பையா

மாவிட்டபுரத்தினைப் பிறப்பிடமாகவும் சேர்.இராமநாதன் வீதி, உடுவிலை (ரொட்டியாலடி) வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை சுப்பையா நேற்று(18.08.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வித்துவான் சுப்பையாவின் (அதிபர்) அன்பு மனைவியும் உஷாதேவியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கனகசுந்தரம் (பிரதி தபால் அதிபர், D.D.M.G.), சோமசுந்தரம் (இளைப்பாறிய உதவிக்கல்வி அதிகாரி) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (18.08.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேர். இராமநாதன் வீதி,*
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (21600) (31-16-18)

தகவல்:
சு.உஷாதேவி (மகள்).

## சண்முகம் சற்குணராசா

திருநெல்வேலி, பாரதிபுலத்தைப் பிறப்பிடமாகவும ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சற்குணராசா அவர்கள் 14.08.2003 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் ரதியின் (ஜேர்மனி) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சண்முகம் - இலட்சுமி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னம் தம்பதிகளின் மருமகனும் ரஜித்தா (ஜேர்மனி), பாமினி (ஜேர்மனி), சந்துஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கமலா, யோகராசா, கோகிலராணி (பூமா), சிவநேசன் (லண்டன்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), கிருபா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜயாத்துரை, புவனேஸ்வரி தேவநேசன், ஆனந்தி, அஜித்தா, செல்வராசா, யோகராஜா (லண்டன்), தவராசா (லெபனான்), மகாலிங்கம் (ஜேர்மனி), சிவராசா, பாலசிங்கம் (பிரான்ஸ்), சுபத்திரா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலாசாலை வீதி,*
*பாரதிபுலம்,திருநெல்வேலி.* (21603) (31-16-18)

தகவல்:
கோகிலராணி
(பூமா - சகோதரி).


**மானிப்பாய் றோட்டறக்ட் கழக**
ஆதரவில்
**மாபெரும் இலவச கண்பரிசோதனை முகாம்**

Lend a Hand

**கொழும்பில் இருந்து வருகை தந்த வைத்திய நிபுணரால் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.**

இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை காலை 8.30 முதல் மாலை 3.30 வரை
**திருநெல்வேலி கலா மண்டபம்.**

நாளை (20.08.2003) புதன்கிழமை காலை 8.30 முதல் மாலை 3.30 வரை
**மாகியம்பதி திருவள்ளுவர் ச.ச.நிலைய மண்டபம்.**

நாளைமறுதினம் (21.08.2003) வியாழக்கிழமை
காலை 8.30 முதல் மாலை 3.30 வரை
**அச்சுவேலி புனித திரேசம்பாள் மகளிர் கல்லூரி**

ரூபா. 3500/= பெறுமதியான கண்ணாடிகளை
ரூ. 750/= இற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம். - இணைப்பாளர்.
(C/29622)

# சமாதானக் கிண்ண உதைபந்தாட்டம் ஹாட்லி, சென்.பற்றிக்ஸ் அணிகள் வெற்றி

பம்பலப்பிட்டி சென்.பீட்டர்ஸ் கல்லூரி ஏற்பாடு செய்துள்ள சமாதானக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரின் முதல் நாள் ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மன்னார் சென். ஷேவியர் கல்லூரி, யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியன வெற்றிபெற்றன.

முதலாவது போட்டியில் பம்பலப்பிட்டி சென்.பீட்டர்ஸ் கல்லூரியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் மோதின. இப்போட்டியில் 3-0 விகிதத்தில் ஹாட்லி அணி வெற்றி பெற்றது.

பி.வசந்தன், ரீ.தீபன் ஆகியோர் ஹாட்லி அணி சார்பாக கோல்களை அடித்தனர்.

இரண்டாவது போட்டியில் மன்னார் சென். ஷேவியர் கல்லூரி அணி, யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 7-0 விகிதத்தில் வென்றது.

மூன்றாவது போட்டியில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியை சென். பற்றிக்ஸ் கல்லூரி 5-0 விகிதத்தில வென்றது. இப்போட்டியில் சி.றொஷாந்தன் இரு கோல்களையும், ஆர். விஜிததன், பி.எஸ்.றொஷான், ஏ.அஜித்குமார் ஆகியோர் தலா ஒரு கோலையும் அடித்தனர். (ஓ)


**CHEMISTRY**
**GROUP CLASSES**
மீட்டல் வகுப்புகள்
**BY: VAKEESAN**
ஆரம்பம்: 20.08.2003 புதன்
பிரிவு I : 7.30 - 9.00 a.m.
பிரிவு II : 9.00 - 10.30 a.m.
(புதிய நேரப்படி)
இடம்: 188, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. T.P.0712386 450
*NOTE:-* விரைவில் மானிப்பாயிலும் ஆரம்பம்.
(21578)



**LOGIC - II**
எஸ்.எஸ். மனோகரன்
**A/L - DAY**
ஆரம்பம்:
புதன் மாலை 4மணி
**FURTHER EDUCATION**
(உடுவில் மகளிர் கல்லூரி).
(21565) (26)


## தமிழீழ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடியை விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றியிருந்தார். இநத நிகழ்வு நடந்த வீரசிங்கம் மண்டபம் அரச அலுவலகமா? தனியார் அலுவலகமா? என்பது குறித்து கண்காணிப்புக் குழுவினர் யாழ். செயலக அதிகாரிகளுடன் நேற்று ஆராய்ந்ததாகத் தெரியவருகிறது. (ஓ-3-8)

## கசிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ழியச் சிறைத்தண்டனையுடன் தலா ஒவ்வொரு லட்சம் ரூபா அபராதமும் நீதிவானால் விதிக்கப்பட்டது.

கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பிரதம பரிசோதகருமான அருணகிரி சிறிசெல்வம தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு சென்ற குழுவினரே சம்பந்தப்பட்ட இருவரையும் கைதுசெய்திருந்தது.

இதன்போது 264 ட்ராம் கசிப்பு, ஆயிரத்து 500 ட்ராம் கோடா மற்றும் உற்பத்தி சாதனங்கள் என்பன கைப்பற்றப்பட்டிருந்தன. (ஓ-3-5-9-180)

## சம்மாந்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் நேற்று மூடப்பட்டிருந்தன. வாகனப் போக்குவரத்தும் ஸ்தம்பித நிலையை அடைந்தது.

அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறா வண்ணம் பொலீஸாரும், பொலீஸ் விசேட அதிரடிப்படையினரும் சகல வீதிகளிலும் நிறுத்தப்பட்டிருகின்றனர். ரோந்து நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை சம்பவம் நடந்த இடத்திற்கு கல்முனை நீதிவான் ஏ.பி.முகைதீன், அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, இச்சம்பவத்தின் எதிரொலியாக சம்மாந்துறைப் பகுதியில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிப்பதில் சம்மாந்துறைப் பள்ளிவாசல்கள் சம்மேளனம் பெரும் முயற்சிகளில் ஈடுபடடிருந்தது. மக்களை அமைதியாக இருக்குமாறு பள்ளிவாசல்களில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச் செய்யப்பட்டது.

## ரணில் மற்றும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்துத் தமது தரப்புக் கருத்துக்களை அமைச்சர் ஹக்கீம் பிரதமருக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

அவற்றைக் கவனத்தில் எடுப்பதாக உறுதியளித்த பிரதமர், உடனடியாகக் கிழக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் பாதுகாப்பு முன்னேற்றப்பாடுகள் குறித்து ஆராய்ந்து திட்டம் வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்டோரைப் பணித்தார் எனவும் அறியவந்தது.

இதன் அடிப்படையில் கிழக்குப் பாதுகாப்புத் தொடர்பாக இன்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் - உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடைபெறும் எனத் தெரிகின்றது.


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**




கடந்த மாதம் இடம்பெற்ற இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் 110M தடைதாண்டல், நீளம் பாய்தல், கோலூன்றிப் பாய்தல் ஆகிய நிகழ்வுகளில் புதிய சாதனையை நிலைநாட்டிய எமது நண்பன்

**சிவப்பிரகாசம் றஞ்சித்குமார்**
(செல்வன்)

அவர்களை நாம் பாராட்டுவதுடன் இன்று (19.08.2003) சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக தென் கொரியா செல்லும் இவர் அப்போட்டிகளிலும் வெற்றி பெற வாழ்த்தும் Room நண்பர்கள்.

| | | |
|---|---|---|
| R.ஜனதன் | K.சதீஸ்குமார் | S.சுரேந்திரா |
| T. துஷ்யந்தன் | K.பிரதீபன் | A.சுபாஸ்கரன் |
| R.காண்டீபன் | S.சுதாகர் | K.கீர்த்திராஜா |
| A.அசோக்குமார் | T. எழில்ரஞ்சன் | R.சுகந் |

(C/29612)



**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 077-6146499, 021-2226188
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்).
(31-12-18-30) (20411)



**பாஸ்போட் தவறிவிட்டது**

நுணசை வீதி, மாதகலைச் சேர்ந்தவர்களான
**அம்பலம் சுப்பிரமணியம்**
(பாஸ்போட் இல. M 1170054)
**சுப்பிரமணியம் ஞானாம்பிகை**
(பாஸ்போட் இல. L 0690660)

என்பவர்களுடைய கடவுச் சீட்டுகளும் இரு விஸாகடன் அட்டைகளும் அடங்கிய ஒரு சிறு (BAG) பை 12-08-2003 அன்று நல்லூர் கந்தன் ஆலய உள்வீதியில் மாலை 5.00 மணியளவில் தவறிவிட்டது.

இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

திரு. செல்லையா,
நுணசை வீதி, மாதகல்.
☎ 070213146.
(21508) (26-16-18-31)



MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
**இலவசக்கணனிப்பயிற்சி**
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 21.08.2003 இற்கு முன் நேரில்





**A/L பரீட்சை முடிவுகள் உங்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கிறதா?**

இன்னும் உங்கள் காலத்தை வீணாக்காதீர்கள்.....
உங்கள் எதிர்காலம் தொடர்பான கவலையை எம்மிடம் விடுங்கள்...

உங்களை இன்னும் மூன்றே மூன்று வருடத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் ஒன்றின் கணனிப்பட்டதாரி ஆக்கிக்காட்டுகின்றோம்

உங்கள் எதிர்காலக் கனவுகளுக்கு நாங்கள் வழிகாட்டி ஊக்கம் அழிக்கக் காத்திருக்கிறோம்.

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.**

**வழிகாட்டல் கருத்தரங்கு**
**ஆகஸ்ட் 23ம், 24ம் திகதிகளில்**

காலை அமர்வு 10.00மணி மாலை அமர்வு 4.00மணி
இடம் - **IIS** பிரதான மண்டபம், யாழ்ப்பாணம்.

**IIS, John Keells Institute** துறைசார் வல்லுனர்களின் வழிநடத்தலினால் நடாத்தப்படும் முற்றிலும் இலவச இக் கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தை தீர்மானியுங்கள்

இக்கருத்தரங்கில் மாணவர்களுடன் பெற்றோரும் கலந்து கொள்ளமுடியும்.
"**IIS** என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

**INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )**
**100, Clock Tower Road, Jaffna.**
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தசாமி யசோதரஞ்சினி

யாழ். பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி யசோதரஞ்சினி அவர்கள் நேற்று (18.08.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசிங்கம் - தையல்நாயகியின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கந்தசாமியின் அன்பு மனைவியும் கஜேந்திரன் (லண்டன்), புஸ்பாஞ்சலி, கபிலேந்திரன் (குரு டீசல் எஞ்சினியர். ஊழியர்), கீதாஞ்சலி, கமலேந்திரன் (லண்டன்), நரேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயமலர் (லண்டன்), பிரியதர்சினி, ஸ்ரீதரன், ஸ்ரீஸ்கந்தராஜா (லக்சன் வீடியோ சென்ரர்), சிவனேஸ்வரி, பமிலா (லண்டன்), மயூரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயராஜசிங்கம் தெய்வநாயகி, காலஞ்சென்ற யோகேந்திரன், சந்திரகுமார் கௌசலாம்பிகை, கலாவாணி, சித்திரா, காலஞ்சென்ற ராஜசேகர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராஜேஸ்வரி, காலஞ்சென்ற கருணாகரன், கௌசலா, இந்திரா நடராஜா, தனபாலசிங்கம், பாலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் வித்தியா, சம்ஷிகா, கரீஷ் கௌதமன் கபில்தேவ், சஞ்சய் (லண்டன்), லக்ஷன் கிருஷாந்தினி, யசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.08.2003) புதன்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

*8/2, பெருமாள் கோவிலடி பின் வீதி, யாழ்ப்பாணம்.* (21602) (31-16-18)

தகவல்:
யோ. ஸ்ரீதரன்
(கண்ணன் - மருமகன்).

### நவரட்ணம் கணேசலிங்கம் (கணேசன்)

முல்லாத்தனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வதிவிடமாகவும்கொண்ட நவரட்ணம் கணேசலிங்கம் 14.08.2003 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் இல்லத்தில் இன்று (19.08.2003) செவ்வாய்க்கிழமை காலை 11மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.29, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில்.* (C/29627) (29-16-18-31)

தகவல்:
க.பத்மாதேவி (மனைவி).

### திருமதி கந்தையா அன்னலட்சுமி

கரணவாய் தெற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா அன்னலட்சுமி அவர்கள் நேற்று (18.08.2003) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இந்திராணி மாணிக்கவாசகர் (முன்னாள் கிராமிய வங்கி முகாமையாளர், கட்டைவேலி ப.நோ.கூ.சங்கம்), கனகரட்ணம் (விசுவமடு), தர்மலிங்கம் (மாவட்ட கடற்றொழில் பரிசோதகர், யாழ்ப்பாணம்), சுந்தரலிங்கம் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாதேவி, சரோஜினிதேவி, கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பழைய ஆஸ்பத்திரி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. T.P: 077-6007506.* (29-16-18-31)

தகவல்:
க.தர்மலிங்கம் (மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.